# University of Madras.

## FIRST EXAMINATION IN ARTS,

## 1908.

# THE LIVES

OF

SIR T. MUTHUSWAMI AIYAR

AND

DEWAN C. RANGA CHARLU

IN TAMIL

BY

T. A. SWAMINATHA AIYAR,

*Editor of the "Arya", Madras.*

Madras:

R VENKATACHALAM & Co.,

*BOOKSELLERS, TRIPLICANE.*

1907.

nnas Eight.] [Copyright

MADRAS:

PRINTED AT THE "KAPALEE" PRESS,

305, THUMBU CHETTY STREET.

ஸ்ரீ

# கனம்-ஸர்-டி-முத்துசாமிஐயர்

B. L. K. C. I. E.

---

இவ்வுலகினிடைப் பிறந்தாரில் உயர்நிலையினமைந்
தார் தாழ்நிலையையடைதலும், தாழ்நிலையினமைந்தார்
உயர்நிலையையடைதலுமியல்பே. இங்ஙனம் உயர்ந்தார்
தாழ்தற்கும், தாழ்ந்தார் உயர்தற்குஞ் சிலர் ஊழேகார
ணமென்ப. சிலர் முயற்சியின்மையு முண்மையுமே கார
ணமென்ப. உற்றுநோக்குவார்க்கு ஊழுமுயற்சியுமாகிய
விரண்டுமே காரணமென்பது பெறப்படும். தாளாண்
மை குன்றாத வேளாளனொருவன், நிலத்தைப் பண்ப
டுத்தி யுழுது வித்திட்டானாயினும் வான மழைவழங்கா
தாயின்விளைவின்றாகும். அவ்வாறேவானம் மழைவழங்கி
னும் வேளாளன் றன்முயற்சியிற் றீர்ந்திருப்பானாயினும்
விளைவின்றாகும் என்பது யாவருமனுபவத்தாலறிந்துள்
ள விஷயமேயன்றோ? வடமொழியாளரும் ஊழைத்தெ
ய்வப்பிரயத்தனமெனவும், முயற்சியைப்புருஷப்பிரயத்த
னமெனவுங்கூறி, இவ்விரண்டு மொருங்குகூடியவிடத்
தன்றி யொருவன் றொடங்கிய காரியஞ் சித்திபெறாத
வின்றென்பார். இக்கருத்துப் பற்றியன்றோ நம்பொய்

யாமொழியார் தாமருளிச்செய்த முப்பாலில், 'ஊழ்' என்றும், 'ஆள்வினையுடைமை' என்றும் வேறுவேறாக விரண்டதிகாரங்களை வகுத்து இருவேறிடங்களில் வைத்தருளினார். ஆயினும் அத்திருக்குறளில் 'ஊழ்' என்னும் அதிகாரம் அறப்பாலில் துறவறவியலைச் சார்ந்தியும், 'ஆள்வினையுடைமை' என்னும் அதிகாரம் பொருட்பாலில் அரசியலைச் சார்ந்தியும் வைக்கப்பட்டமையை நன்கு நோக்குவார்க்குத் துறவறத்தினமைந்தார் ஊழை முக்கியமெனவும், இல்லறத்தினமைந்தார் முயற்சியை முக்கியமெனவுங் கொள்ளவேண்டுமென்பதுதெற்றென விளங்கும்.

என்னெனின், துறந்தார் தம்முயற்சியினால் இவ்வுலகினிடைத் தேடவேண்டிய தொன்றுமின்றாகலானும், அவர்கள் தேகமுள்ளவளவும் அதனைச் சார்ந்துவரும் இன்பதுன்பங்களை 'ஊழினால்வந்தனவாம்' எனக்கருதியமைந்திருத்தல் வேண்டுமாகலானும், இல்லறத்தினமைந்தார் அதுநடத்தற் கின்றியமையாததாகிய பொருளீட்டற்கண் தம்முயற்சியைச் செலுத்தவேண்டியது அவர்கட்கு முக்கியகடமையாகலானு மென்க.

இவ்வுலகினிடை யில்லறத்தினமைந்து உயர்நிலையையடைந்துவிளங்கிய மேலோர்களின் சரித்திரங்களைக் காணுந்தோறும் அவர்க ளந்நிலையை யடைந்ததற்கு அவர்களது முயற்சியே காரணமாயிருந்ததென்பது நன்கு புலப்படும்; ஆகையால், அத்தகையாரது சரித்திரங்க

ளைப் பன்முறையும் படித்து, அவர்கள் நம்வாழ்நாளில் எப்படியொழுகினர்? தாம்செய்யத்தொடங்கிய காரியங்களிற்றம்முயற்சியை எவ்வாறுசெலுத்தினர்? ஆகியிவர்கள் இருந்தநிலையாது? பிறகு அவர்கள் அடைந்த பதவியாது? என்னும் விஷயங்களை யாய்ந்தறியவேண்டியது இவ்வுலகின் மனிதராய்ப்பிறந்தார் ஒவ்வொருவருக்கு முக்கியகடமையேயாகும்.

அங்ஙனம் ஆய்ந்தறிவார்க்கு "நாமும் அவ்விதமுயற்சியை யுடையவர்களாகி மேன்மையடையவேண்டும்" என்னுங் கருத்துண்டாகும்; கருத்துண்டாகவே முயற்சியுடையராவர். ஆகவே, "முயற்சியுடையா ரிகழ்ச்சியடையார்" என்றபடி மேன்மையடையவர். ஆதலால், அவ்விதநலத்தினை யிவ்வுலகினர்க்குப் பயக்கக்கூடிய சரித்திரங்களில் ஒன்றுமென வெண்மனதிற்பட்ட ஆனரபல்-ஸர்-டி. முத்துசாமி ஐயர் அவர்களுடைய சரித்திரத்தைச் சர்வலோக சரணியனாகிய பகவானது திருவடிக்கமலங்களை யுள்ளத்தடத்தமைத்து ஈண்டுவிளக்கப் புகுகின்றேன்.

---

அமிழ்தினுமினிய தமிழ்மொழிவழங்குநாடு தென்னாடு எனப்படும். இது சேரமண்டலம், சோழமண்டலம், பாண்டிமண்டலம், தொண்டைமண்டலம் எனநான்கு மண்டலங்களாக வகுக்கப்பட்டுள்ளது. இவற்றுட் சோழமண்டலமானது நீர்நிலவளங்களான் மற்றைய மூன்று

மண்டலங்களினும் மிகச் சிறந்தது. ஒருகால் ஔவையார் இந்நான்குமண்டலங்களையும் ஒரு செய்யுளாற் புகழத்தொடங்கி, "மேதக்க, சோழவளநாடு சோறுடைத்து" என்றனர். இம்மண்டலம் இங்ஙன மற்றைய மண்டலங்களினுஞ் சிறந்து விளங்குதற்குக் காரணம் யாதோ வெனின்? குடகுமலையினின்று மிழிந்து மிக்குப்பெருகி இடையறாத நீரோடுகூடி மதகுகளையுந்தி, வறியவர்க்குதவும், வள்ளியர்களையொப்பத் தெள்ளிய திரைக்கரத்தால் வெள்ளியமுத்தினங்களையும், பொற்சன்னங்களையும் இறைத்து, தேக்கு, அகில், சந்தம், நரந்தம், நாகம் முதலிய பலமரங்களை வேருடன் பெயர்த் தெடுத்துக்கொண்டு, குறிஞ்சிநிலப்பொருள்களையும், முல்லைநிலப்பொருள்களையும் ஒருங்குசேர்த்து வாரிக்கொண்டுவந்து, 'தாதுகுசோலைதோறுஞ் சண்பகக்காடுதோறும், போதவிழ்பொய்கைதோறும் புதுமணற்றடங்கடோறும், மாதவிவேலிப்பூக வனந்தோறும் வயல்கடோறும், உடம்புதோறும் உயிரென உலவி' வேதசாகைகளெனப் பெருகிய பலசாகைகளோடுகூடிப் பொலியாநிற்குங் காவிரியாறே. அன்றியும் இம்மண்டலத்திலேயே வைணவதலங்களுட் சிறந்த திருவரங்கம் பெரியகோயிலும், மற்றும்பலவைணவசந்நிதிகளும், சைவதலங்களுட் சிறந்த சிதம்பரமும் மற்றும் பலசைவதலங்களும் அமைந்திருக்கின்றன. ஔவையார் மேற்கூறியசெய்யுளிற், "சான்றோருடைத்துத தொண்டை"

என்று புகழ்ந்த தொண்டமண்டலமும் இதனுட்பிரி வானதே.

முற்காலத்தில் இச்சோழமண்டலத்தை யாண்ட மன்னர்கள் மற்றைய தேயமன்னவர்கள் யாரையும் வென்றி கொண்டு, தமது வெற்றிக்கொடியை எத்தேயத்தினு நாட்டித் தாமே மற்றையதேய அரசர்கள் யாரினுஞ் சிறந்து விளங்கினார்கள். இவர்களுக்குத் துணையாக மிக்கபராக்கிரம சாலிகளான பலசிற்றரசர்களும், சிறந்த பிரபுக்களும், பெரியபெரிய கவிராயர்களும் இதிற்றோன்றிவிளங்கினர். கவிச்சக்கிரவர்த்தியாகிய கம்பநாடர் பிறந்ததும், வளர்ந்ததும், கவிசார்வபௌமரெனப் பெயர் பெற்றதும் இம்மண்டலத்திலேதான். கம்பநாடகமென்றும், கம்பசூத்திரமென்றும் புகழப்படுகின்றதும், செந்தமிழ்வளங்கள்யாவும் ஒருங்கு அமையப்பெற்றது மாகிய கம்பராமாயணத்தை அக்கவிராஜகேசரியார் நாளொன்றுக்கு எழுநூறுபாடல்களாகப் பாடிமுடித்ததும் இம்மண்டலத்திலேதான். ஒப்புயர்வில்லாத அப்புலவர்பெருமானை யாதரித்து, அவரைக்கொண்டு அவ்விராமாவதாரம் என்னும் பாரகாவியத்தைப் பாடுவித்த பல்பெரும்புகழுடைய பிரபுவாகிய சடையப்பவள்ளலும், பொருளினுங் கொடையினும் நடையினுஞ் சிறந்தவரும் அம்மகாகவியின் மாணவருமாகிய எகம்பவாணருந் தோன்றிவிளங்கியது இம்மண்டலத்திலேதான்.

பெருகிய பலநூற்களினாலுஞ் சொல்லிமுடித்தற்கியலாத சிறந்த பலவளங்களையுடைய இச்சோழமண்டலத்தில், தஞ்ஜாவூர்ஜில்லாவில், உச்சுவாடியென்னுங்கிராமத்தில் நாற்பாற்குலத்தினுண் மேற்பாற்குலமாகிய பார்ப்பனக்குலத்திற் பெருமையுற்ற மரபிலே 1832-ஆம் இச்சென்னைராஜதானியில் ஆங்கிலமொழியினுள் முதன்மையுறநிற்பாரில் யானே முதன்மையானவன் எனக்குறிப்பாலுணர்த்துவார்போல் ஆங்கிலமாதங்களுண் முதன்மாதமாகிய ஜனவரிமாதத்தில் நமது முத்துசாமி ஐயர்பிறந்தனர். அவர்பிறந்த குடும்ப மிகவு எளியகுடும்பம். அவரது தந்தையாராகிய வெங்கடாசலசாஸ்திரியார் பொறை, அடக்கம், தயைமுதலிய நற்குணங்கள் ஒருங்கமையப்பெற்றவர். அவரது அன்னையோவெனின்,

(1) "மாசிலாக்குலத்துள்வந்தாள்வருவிருந்துவப்பவூட்டு
நேசமிக்குடையாள்கொண்கனினைப்பறிந்தொழுகுநீராள்
தேசுறுவாய்மையுள்ளாள்சினந்திடலென்றுமில்லாள்
பேசுதிண்கற்புவாய்த்தாள்பெற்றதேகொண்டுவப்பாள்.

என்று சொல்லிய குணமெல்லா நன்குநிரம்பப்பெற்றவள். இத்தகைய குணசீலர்களாகிய அம்மேலோருக்கு நமதுஐயரேயன்றி, அவருக்கு மூத்தபுத்திரரும் ஒருவருண்டு. அம்முதுமக்கள் பொருட்பேறு இல்லாதவர்களாயினும்,

(2) "பெறுமவற்றுள் யாமறிவ தில்லை யறிவறிந்த
மக்கட்பே றல்ல பிற."

என்றபடி அப்புத்திரப்பேற்றையே பெரும்பேறாக எண்ணி, அப்புத்திரர்கள் பேசுமழலைச்சொற்களையே தம்மிருசெவிக்கு முரிய இன்பமாகவும், அவர்களது தளர்நடையைக்காண்டலே கண்ணுக்குரிய இன்பமாகவும், அம்மக்கள் தமது காந்தளிதழ்போன்ற சிறுமெல் விரல்களால் தம்மை யோடிவந்து கட்டித்தழுவுதலே உடற்குரிய இன்பமாகவும் அவ்வரும்பெறற் புதல்வர்களது உச்சிமோந்து முத்தமிடுதலே மூக்கிற்கும், வாக்கிற்குமுரிய இன்பமாகவுங்கொண்டு மகிழ்ந்திருந்தனர். இவ்வுலகத்தில் 'இன்னடிசில்புக்களையுந்தாமரைக்கைப் பூநாறுஞ் செய்யவாய் மக்களை யில்லாதவர் பொன்னுடையரேனும் புகழுடையரேனு மற்றென்னுடையரேனும் உடையராவரோ?' ஆகார். அன்றியும் அவர்கட்கு,

(3) "கல்லாமழலைக்கனியூறல்கலந்துகொஞ்சுஞ்
சொல்லாலுருக்கியழூதோடித்தொடர்ந்துபற்றி
மல்லார்புயத்தில்விளையாடுமகிழ்ச்சிமைந்தர்
இல்லாதவர்க்குமனைவாழ்வினின்பமென்னும்."

என்றபடி மனைவாழ்க்கையில் இன்பம் ஒருசிறிதுந் தோன்றாது. புத்திரப்பேறில்லையாயின் 'மெய்தானம் வண்மை விரதந்தழல்வேள்வி நாளுஞ்செய்தாலு ஞாலத்தவர் நற்கதிசென்று சேரார்' என்று நூற்கள் புகல்கின்

றமையின் 'மைதாழ்தடங்கண் மகவின்முகமன்னுபார்வை யெய்தாதொழிவார்க்குப் பெறுமின்ப மெவனுமில்லை.' மக்கட்பேறுள்ளவர்களே இம்மையம்மை என மறைபுலங்கொளச்செப்பும் இருமையும் அடைதற்குரியர். என்பதை யம்முதுமக்கள் நன்குணர்ந்தவர்கள். ஆதலின், தமக்குற்றுள்ள வறுமையினாலாகுஞ் சிறுமையையுன்னி மனந்தளராமல், அம்மக்களின் அருமையேயெண்ணிப் பெருமையாகவாழ்வாராயினர். இங்ஙனஞ் சின்னாள்செல்ல, அவ்விருமுதுமக்களுள் வெங்கடாசலசாஸ்திரியார், " இத்தேகமானது

(4) "வினையின்வந்தது வினைக்குவிளைவாவது
புனைவனநீங்கிற் புலால்புறத்திடுவது
மூத்துவிளிவுடையது தீப்பிணியிருக்கை
பற்றின்பற்றிடங் குற்றக்கொள்கலம்
புற்றடங்கரவிற் செற்றச்சேக்கை
யவலக்கவலை கையாறழுங்கல்
தவலாவுள்ளந் தன்பாலுடையது
மக்கள்யாக்கை."

என்றகூற்றுக்கிலக்காயிருப்பது; அன்றியும் 'படுமழை மொக்குளிற் பல்காலுந்தோன்றிக்கெடுவது' இதனை நம்பியிருத்தலாற்பயனென்?" என்றுன்னிப் பத்துடையடியவர்க் கெளியவனாகிய பகவானது திருவடிக்கமலங்களைத் தமது உள்ளத்தடத்தமைத்துக்கொண்டு பொய்

யாகிய இம்மெய்மையைநீத்துச் சிந்தையுமொழியுஞ் செல்லாநிலைமைத்தாகிய அந்தமில் பேரின்பவீட்டையடைந்தனர்.

இங்ஙனம் அவர்விடுற்றமையின், இடிமேலிடியுற்று வாடிய சர்ப்பமென, மிடிமேன்மிடியுற்று வாடிய அவரது இல்லக்கிழத்தி என்செய்வாள்? பாவம்! பாவம்!!. 'இனி இம்மக்களைப்பேணுதல் எவ்வாறு? ஆ கெட்டேன்! என்செய்வேன் தெய்வமே! யாரிடம்புகலடைவேன்? இனியாரே இம்மக்களுக்குத்துணையாகுவார்?' என்று கலங்கினள். பிறகு 'வறியோர்க்கழகுவறுமையிற்செம்மை' எனவும், 'ஊக்கமுடைமை யாக்கத்திற்கழகு' எனவும், பெரியார்பணித்த நீதிமொழிகளை யுன்னி, ஒருவாறு உள்ளந்தெளிந்து 'இனிஇம்மைந்தர்களைக்காப்பாற்றுங் கடமை நமதே. இங்கிருந்து மனந்தளர்ந்து வருந்துவதனால் எட்டுணையும் பயனின்று'. என்றுட்கொண்டு, முன்னர் அவ்வறுமையினுந் தமது திறத்தினால் ஈட்டிவைத்த சொற்பப்பொருளைக்கைக்கொண்டு அந்நல்லிளம்பாலர் இருவரோடு திருவாரூரையடைந்தனள். இவர்கள் அவ்வருந்தண்கமலையை யடைதலும், வெண்கமலையும், செங்கமலையும் இவர்களையடையவிரும்பினர். அவ்வன்னை அவ்வூரையடைந்தபிறகு இவ்வாறு எண்ணுவாளாயினள். "கல்வியானது அறம்பொருள் இன்பமும் வீடும் பயக்கும், புறங்கடை நல்லிசையுநாட்டும், உறுங்கவலொன்றுற்றுழியுங் கைகொடுக்கும், அன்றியும் அதுவைப்

புறிக்கோட்படாது, வாய்த்தீயிற்கேடுறாது, மிக்க சிறப்பின் அரசர்செறினும் வவ்வப்படாது, தாயத்தாராலுங் கொள்ளப்படாது, பிறர்க்கீயினுங்குறையாது, ஆதலால், அதனை நம்மக்களுக்கு நம்மாலியன்றவளவு சேர்த்து வைத்தல்வேண்டும்" எனத் துணிந்தனள். இங்ஙனந் தந்தைமகற்காற்றவேண்டிய கடமையைத் தானாற்றத் துணிந்த அம்மாதரசி தன்கையிலுள்ள சொற்பப்பொருளைக்கொண்டு ஔவையார் 'தந்தையொடுகல்விபோம்' என்றுரைத்தவாக்கியம் பொய்படும்படி அம்மைந்தர்கட்குக் கல்விபயிற்றுவிப்பாளாயினள். அவ்விருமைந்தர்களில் நம்முத்துசாமிஐயரையே வெண்கமலை விரும்பினள். செங்கமலையும் அவரையடையவே விருப்புடையளாய் அவருழை அதர் வினைப்ச்செல்லக்கருத்துக்கொண்டனள். அதனான் நம்முத்துசாமிஐயர் அச்சிறுவயதிலேயே உபாத்தியாயர்கற்பிப்பதை யொருசிறிதுமுட்டின்றி யுள்ளத்திற் கொள்ளலுற்றனர். 'விளையும்பயிர் முளையிலேயே தெரியும்' அன்றோ? அவரது அன்னையும் இயற்கையறிவாகிய ஒளியினைக்கொண்டிலகும் இம்முத்தே இனிக் கல்வியினாலாகுஞ் செயற்கையறிவையுங்கொண்டிலகக்கூடியது எனமனத்துட்கொண்டனள். அதனால், அவரிடமே அவ்வம்மைக்கு அன்புபெருகுவதாயிற்று. இயற்கையிலேயே தாய்மாருக்குக் கடைசிமைந்தனிடம் அன்பு அதிகரித்திருத்தல் உலகியற்கை. அவ்விருமைந்தருந் தமிழ்க்கடலிற்படிந்து சிறிதுதூரம் ஓடியாடித்

திளைக்கையிலேயே அவ்வம்மைகொணர்ந்த சிறுபொ
ருண்முற்றுஞ்செலவாயிற்று. அதற்குமேல் அவர்களைப்
படிப்பிக்கவியலாமன் மிகவுந் தயங்கினள். மற்றென்
செய்வாள் பாவம்? அந்தோ! கொடியதிற் கொடிதுவறு
மையன்றே? இளமையில்வறுமை அதனினுமிகக் கொ
டியதல்லவா? அதைப்போலும் இன்னாதது அதுவே
யாம். அவ்விருமக்களும் அச்சிறுவயதிலேயே அத்தகை
யவறுமைக்கிடனாய் நின்றனர். அதனால், அம்மாதரசிக்கு
அதுகாறும் உண்டாயிருந்த களிப்புமுற்றுஞ் சிதைந்
தொழிந்தது. தரித்திரமானது 'களிப்பாங்கடலுக்கோர்
வடவை' யல்லவா? பிறகு அவ்வம்மையின்மனம் இக்
குமரர்விஷயத்திலும் குடித்தனவிஷயத்திலும் பலவாறு
எண்ணி யெண்ணிப் புண்படலாயிற்று. எண்ணங்கள்
யாவும் வாழ்தற்கு இடமாயிருப்பதுந்தரித்திரமேயன்
றோ? பற்பல துக்கங்கள் தோன்றத்தக்கதோர் ஆகரமா
யிருப்பதும் அதுவேயாம். அவ்விளைஞர் இருவரும்
என்செய்வார்கள்? வயிறாபிழைக்கும் வழியைநாடி வெ
ளியேசென்றார்கள். 'சுவரைவைத்துக் கொண்டன்றோ
சித்திரமெழுதவேண்டும்' உடலைவைத்துக்கொண்டன்
றோ ஒருவன் எல்லா நலங்களையுமடையவேண்டும்;
அவ்வுடலும் வயிற்றுக்கு உணவிருந்தாலல்லவா நிற்கக்
கூடியது? வயிறு ஒருநாளுணவை ஒழித்திருவென்றால்
ஒழித்திருப்பதா? அன்றி இருநாளைக்கு ஒன்றாய் ஏற்

றுக்கொள் என்றால் ஏற்பதா? அதுமிக்க இடும்பையை விளைப்பதல்லவோ? அதன்கொடுமையினாற்றானே இவ்வுலகின்கண் மாந்தர்கள்

"சேவித்துஞ் சென்றிரந்துந் தெண்ணீர்க்கடல் கடந்தும்
பாவித்தும் பாராண்டும் பாட்டிசைத்தும்—போவிப்பம்
பாழி னுடம்பை வயிற்றின் கொடுமையா
னாழி யரிசிக்கே நாம்." (5)

என்று நமது சரஸ்வதி அம்சமான ஔவையார் அருளியபடி அருமையாகக் கிடைக்கப்பெற்ற இம்மனிதயாக்கையைப் பலவகைப்பாடுபட்டு வீணேகழியாநிற்கின்றனர்.

அவ்விளைஞர் இருவரில் சிலதினங்கண் மூத்தவர் மெய்வருந்திச் சம்பாதித்துக் கொண்டு வருவதைக்கொண்டு மூவரும் வயிற்றுப்பாட்டைக் கழித்துவந்தனர். ஆயினும், முற்றும் அப்படிச்செய்துவர முடியவில்லை. குடும்பமாகிய பேரியதோர் தேரை நடத்துதன் மூத்தவயதும், முதிர்ந்த வனுபவமு முடையவர்களுக்கும் கஷ்ட சாத்தியமானகாரியமெனில், அவ்விளஞ்சிறுவர் ஒருவரால் அது முடியுங்காரியமாமோ? ஆதலால், நம் முத்துச்சாமிஐயரும் அக்காரியத்தில் தமது சகோதரருக்குத் துணையாகப் பாடுபடவேண்டியவராயினர். அவ்விளைஞர்கள் இருவரும் ஒருகிராமக் கணக்கனிடத்தில் உதவிக்கணக்கர்களாகவமர்ந்தனர். அவர்களுள்

நம் முத்துசாமிஐயர் மாத மொன்றுக்கு நிவேதன மாக முதன்முதல் பெற்றது ஓரே ஒரு ரூபாய் தான். ஒன்றேயன்றோ? சகல எண்களுக்கு முதலாயுள்ளது. உலகம்யாவையுந் தாமுளவாக்கலும் நிலைபெறுத்தலும் நீக்கலும் நீங்கலா வலகிலாவிளையாட்டினை யுடையரா கிய கடவுளும் ஒருவரேயல்லரோ? அவ்வொருரூபாயே நமது ஐயர் தமது தாயாரைப்போஷிக்கவும், பிறகு தாம் தமதுவல்லமையினால் உயர் நிலையையடைந்து இவ்வுலகினர்க்கு நீதிமொழிந்து நிலையான குற்றமற்ற பெரும்புகழைத் தேடிக்கொள்ளுதற்கும் காரணமாயி ற்று. ஐயரவர்கள் அவ்வொருரூபாயை மிக்கமகிழ்ச்சி யோடுபெற்றுக்கொண்டுவந்து தமதருமையன்னையிடம் கொடுத்தனர். அவ்வம்மையும் தனது அருமைமைந்தன் கொணர்ந்த அவ்வொற்றைவெள்ளியைப் பெற்றுக்கொ ண்டு பகவானை யுன்னி யுன்னி 'ஒன்றே பத்து, அதுவே நூறு, அஃதே ஆயிரம், அதுவே ஐயாயிரமும்ஆம்; இவ்வொன்றைக்கொண்டே நம்முத்து மேன்மேலும் பெ ருகுதல்வேண்டும். இதுவே நமதுபாக்கியம்.' என்றெ ண்ணி மகிழ்ந்தனள். 'மாதாமனமகிழ்ந்தால் வாழாரொ ருவருளரோ?' இவ்வாறு தாம் மாதந்தோறுங் கொண் டுவந்து கொடுக்கும் ஒருரூபாயைத் தன் திருக்கரத்தே ற்றுக் களிகூரும் தமது அன்னையைக்கண்டு தாமும் சந் தோஷசாகரத்துண்மூழ்கி ஒளிகொண்டு தோன்றுவர். நமதுஐயர் இவ்விதச் சந்தோஷத்தை விரைவினிழந்து

விட்டனர். "தந்தையொடு கல்விபோம்" என்றருளிச் செய்த அக்கிழவியே அவ்வாக்கியம் பொய்படும்படி கல்விச் சுவையைத் தன்மக்களுக்கு ஊட்டிவைத்த இக் கிழவியை விட்டினளோ? அன்றி இக்கிழவியே தன் னைப்போன்ற பெண்ணுவாமொருத்தி முன்சொல்லி வைத்த வாக்கியங்களுளொன்றைத் தன்மக்களின்பொ ருட்டுத் தான் பொய்ப்படுத்திய குற்றந்தீர அவ் வாக்கியங்களுண் மற்றொன்றை மெய்ப்படுத்துவான் மரித்தனளோ? என அனைவரும் ஐயுறும்படி அவரது அன்னை பரகதியடைந்தனள். அவ்வம்மை தன் மரணத் தினால் மெய்ப்படுத்திய வாக்கிய மியாதோவெனின், 'தாயோடறுசுவைபோம்,' என்பதே: நமது ஐயருக்குத் தமது தாய் மரணத்தினை லறுசுவை போய்விட்டதா யினும் அவளாலூட்டிவைக்கப்பட்ட கல்விச்சுவைமாத் திரம் நீங்காம லுளுக்குநா ளோங்கி வளர்வதாயிற்று. திரிசிரபுரத்தில் தாயுமானசுவாமி யுண்டென்பர். நமது ஐயருக்குத் தாயே தந்தையுமான சுவாமியாகியிருந்த னள். அவளே அறுசுவையுள்ள உணவுகளையூட்டி அவ ரது உடலைவளர்த்தவள். அவளே, கல்வியறிவையூட்டி யறிவையும் வளர்த்தவள். அவரது ஆக்கத்திற்குக் கார ணமானவளும் அவளே. அத்தகைய வன்னையை அவர் அச்சிறுவயதிலேயே இழந்துவிட்டது கொடுமையுட் கொடுமையே. அந்தோ! அஃது எவ்வளவு பரிதாபமா னதிலே. உலகில் ஒருவனுக்கு அதைப்போலத் துன்பத்

தை விளக்கக்கூடியது மற்றொன்றுண்டோ? நமதையர் இயற்கையிலேயே எளியகுடும்பத்திற் பிறந்தவர். பிறகு தந்தையின்மரணம் தலைக்கொண்ட துன்பத்தைத் தந் தது. இந்தத்துன்பங்கண்முற்றும் தனது நுண்ணறிவி னாற் றன்மக்களுக்குத் தோன்றாவண்ணம் பேணிவளர் த்துக் கல்விச்சுவையையும் ஊட்டிவைத்த தாயையும் அச்சிறுவயதிலேயே இழந்துவிட்டனரெனின் அவரு க்கு அக்காலத்தில் உற்றதுன்பத்தை யாரே அளவிட்டு ரைக்க வல்லார். ஒன்றன்மேலொன்று யடுக்கியுற்ற அவ் விடுக்கணிலும்,

(6) "அடுக்கி வரினு மழிவிலா னுற்ற
விடுக்க ணிடுக்கட் படும்"

என்றபடி தமக்குற்ற அவ்விடுக்கண் ணிடுக்கட்படும்படி தமதுள்ளக் கோட்பாட்டை விடாதவராய் உத்தியோக த்தையுங் கல்வியையு மேன்மேலும் விருத்திசெய்வதி லேயே நோக்கத்தைச் செலுத்திவந்தனர். இவ்வாறாக அவர் 1846 - ஸு வரையில் அவ்வுதவிக்கணக்கு வே லையைப் பார்த்துவந்தனர். அப்பொழுதவர்க்கு வயது பதினென்காயின. அவர் அவ்வுத்தியோகத்தி லமர்ந்த போது வயது பன்னிரண்டாம். இனத்தையினங்காக்கு மென்பதுபோல் அக்காலத்தில் நம்முத்துசாமிக்கு மற்றோர் முத்துசாமியே பெயரொற்றுமையினால் து ணையாகவாய்த்தனர். அவர்யாரெனில், அக்காலத்தில்

கலெக்டராயிருந்த சர் - ஹேன்றி மாண்ட் கோமரி என்னும் துரையினிடம் பொட்ளராயிருந்து அவரது நயவுக்குரியவராகி அவரால் தாசீல்தாருத்தியோகஞ் சம்பாதித்துக்கொண்டு யாவராலும் பொட்ளர் முத்துசாமிநாயகரெனவும் தாசீல்நார் முத்துசாமிநாயகரெனவும் சொல்லப்பெற்றிருந்த திருவாரூர்தாசில்தார் முத்துசாமி நாயகரென்பவரே: அவர் நமதையரது மதிநுட்பத்தைக் கண்டு அவரைத்தம்மிடத்திலேயேஒருசிறுஉத்தியோகத் திலமர்த்திக்கொண்டனர்.ஐயரவர்கள் அதிலிருந்துகொண்டு இரண்டுவிஷயங்ளிற்காட்டியமதிநுட்பமானது அந் நாயகரது உள்ளத்தை முற்றுங்கவர்ந்துகொண்டு அந்நாயகருக்கு ஐயர்மீதுள்ள அன்பைமுன்னிலும் பதின்மடங் கதிகமாக வளர்த்துவிட்டது. அவற்றுண் முதலாவது:— அவ்வூரையடுத்துள்ள நதியொன்றில் வெள்ளமதிகமாய்ப்பெருகிப் பயிர்வகைகளுக்கு மிக்கசேதத்தைவிளைத்ததாகத் தாசீல்தாருக்கு ஓரறிக்கைவந்தது. அதைக்கண்டு தாசீல்தார் அதன்சம்பந்தமான சிலவிஷயங்களை அறிய வேண்டிக்கச்சேரிக்குச்சென்று குமஸ்தாவை அழைத்து வரும்படி சேவகனொருவனுக்குக் கட்டளையிட்டனர். அவன் கச்சேரிக்குச்சென்று பார்க்கையில் அங்கு நமதையரையன்றி மற்றொருவரையுங் கண்டிலன். ஆதலின், அவன் அவரிடமே தாசீல்தாரின் கட்டளையைத் தெரிவித்தனன். அவர் அதைக்கேட்டு மிக்கதைரியத்துடன்

தாசில்தார் சமுகத்தையடைந்தனர்; தாசில்தார் அவரை க்கண்டு தமக்குவந்த அறிக்கையை அவர்கையிற்றந்து "இதன்சம்பந்தமாக ஏதேனுமறிவையோ ?" என்று வினவினர். அதற்கு ஐயர் "விரைவிற் றெரிந்துகொண்டு வந்து கூறுகின்றேன்" என்றுரைத்து விடைகொண்டு ஆற்றுப்பெருக்கினாற் சேதமடைந்த இடத்தையணுகி யதனையளந்து அதன்மராமத்துக்கு வேண்டிய சாமான் கள் மலிவாகவும் நயமாகவும் இன்னவிடத்தில் கிடைக் குமென்பதையும் தெரிந்துகொண்டுவந்து கூறி, பிறகு அவற்றையெல்லாம் ஓரோலையிலெழுதி அதையும் தாசி ல்தாரிடங்கொடுத்தனர். தாசில்தார் அவ்விஷயங்கள் சரியாயிருக்குமென அப்பொழுதுநம்பிலர். ஆயினும் பிறகு பெரிய கணக்குப்பிள்ளையைக்கொண்டு ஒப்பிடுவி த்து அக்கணக்குப்பிள்ளையால் ஐயர் தெரிவித்தனயாவும் சரியாயிருத்தலையறிந்து அவரது அறிவினாற்றலைமிகவும் வியந்து புகழ்ந்தனர்.

இரண்டாவது:—ஒரு பெரிய மிராசுதாரர் தீர்வைபா க்கியை அறியஒருதினம் தாசில்தாரிடம் வந்தனர். தாசில் தார் அதைப்பற்றி நமதையரைக்கேட்க; அவர் ஒருசிறி துந் தளராமற் கற்றைப் பனையோலைக்கட்டொன்றைக் கையிலேந்திக் கயிற்றையவிழ்த்துப் புரட்டிப் புரட்டிப் பார்த்து இன்னவின்ன இசுமிலில் இன்னவின்ன பசலி க்கு இத்தனையித்தனை பாக்கியென அம்மிராசுதாரரது

தூரதூரமாயுள்ள இருபதுநிலங்களுக்குஞ் சரிவரக்கூறினர். பிராசுதாரரும் அவையாவுஞ் சரியெனவொப்பினர். உடனே தாசில்தார் ஐயரது கையிலிருந்த ஓலைக்கட்டை வாங்கிப்பார்த்து அதுவெறுங்கட்டாயிருக்கக் கண்டு அவ்வளவுவிஷயங்களையும் அவ்விளைஞர் ஞாபகத்தில் வைத்திருந்தே சொல்லினர் என்பதை யுணர்ந்து, அவரது ஞாபகசக்திக்காக அவரைப்பலமுறையுங் கொண்டாடி "இவ்வரும்பெறன்முத்து இனிநம்மால்துறக்கத்தகுவதோ?" என்றார். அத்தாசில்தார் நமது சரிதத்தலைவரைச் சலஞ்சலம்பெற்றமுத்தினும் அரியமுத்தேனவே பாவித்து அன்றுமுதல் முத்தென்றே அழைப்பாராயினர். அஃது ஐயருக்குத் தமதன்னையின் மொழிபோலின்புறுத்துவதாயிற்று. அன்றுமுதல் தாசில்தார் அவரைத்தமது கச்சேரியிற் றமதருகே அமர்த்திக்கொண்டனர். அம்முத்துக்குப் போதுமானவேலை கச்சேரியினுமில்லை. அதினுங்காலை பதினொருமணிமுதல் இரண்டுமணிவரையில் தினைத்துணைவேலையுமிருப்பதில்லை. ஆதலால், அவரது சித்தம் பரவிக்கொண்டேயிருந்தது. அவர் நாடோறும் மேர்குறித்த ஓய்வுக்காலங்களிற் கச்சேரிக்குச் சமீபத்தில்வைக்கப்பட்டுள்ள சோக்கவுபாத்தியாயரது பாடசாலைக்குப்போய்ச் சேய்மையிலுட்கார்ந்திருந்து அக்கணக்காயர் பிள்ளைகளுக்குப் போதிப்பதையெல்லாஞ் செவியே வாயாகவு நெஞ்சேகளனாகவு முட்

கொண்டுவப்பர். இவ்வாறு இங்கிலீஷ் நெடுங்கணக்
கை முற்றுமனனஞ்செய்தனர். பிறகு அவருக்கு அவ்
வாங்கிலமொழியைக் கற்கவேண்டுமென அதிகவிருப்பு
ண்டாயிற்று. அவ்விளைஞர் நல்குரவென்னு மிடும்பை
க்குட் பட்டவராயினும் அவர் தளராதவூக்கமுடைய
வராதலானும் அதனுடன் அவருக்கு அம்மொழியைக்
கற்பதற்கான வூழுண்மையானும்,

(7) “பரியினு மாகாவாம் பாலல்ல வுய்த்துச்
சொரியினும் போகா தம.”

என்றபடி அதனைக் கற்பதற்கு வேண்டிய அநுகூலங்க
ளும் அவர் விரும்பியபடி வாய்ப்பனவாயின. எங்ஙன
மெனில், தாசீல்தார்நாயகருக்கு மருமகனொருவனிருந்
தனன். அவனுக்குக் கல்வியறிவையூட்டவேண்டுமெ
ன்னுமவா அவருக்கதிகமாயிருந்தது. ஆதலால் அவர்
அவனுடன் நமதையரையுங்கூட்டி இருவருக்கும்
இங்கிலீஷ் முதற்பாடந்துவக்கித் தமக்குற்ற ஓய்வுநேரங்
களிலெல்லாம் போதித்துவந்தனர். ஒருகால் அவர்
அவர்கள்படிப்பைப் பரீக்ஷிக்கவிரும்பி அவ்விளைஞரிரு
வரையுநோக்கி “நானின்னு மொருவாரத்திலுங்களைப்
பரீக்ஷிக்க வெண்ணியிருக்கிறேன். அதற்குள்ளாக
நீங்களுங்கள் பாடத்தைச் சித்தப்படுத்தி வையுங்கள்”
என்றுநியமித்தனர். பிறகு அவ்வாறே அவர் அவ்
விருவரையு மழைத்துப் பரீக்ஷித்துத் தமதருமைமரு

கன் சிலதாள்களைமாத்திரம் படித்திருப்பதையும் ஏழைப்பார்ப்பனப்பிள்ளையாகிய முத்துசாமிஐயர் புத்தகமுழுதினையும் படித்திருத்தலையுங் கண்டு தன்மருமகனிடத்து வெறுப்பும் நமதையரிடத்து விருப்புமுடையவராயினர். அப்பரீக்ஷையினால் ஐயரைநன்றாய் விருத்தியடையக்கூடிய சிறுவரெனத் தாசீல்தார் உணர்ந்துகொண்டவராய் உடனே அவரை நாகப்பட்டினத்திற்கு அங்குள்ள மிஷ்யோன் பாடசாலையிற் படிக்கும்படி யனுப்பினர். நமதையர் "இவனைப்பெற்ற வயிறுடையாள்முற்பிறப்பில் எவ்வகைச் சிறந்த தவத்தைச்செய்தனளோ?" என்று அனைவரும் வியந்துரைக்கும்படி பதினெட்டு மாதகாலம் அப்பாடசாலையிற் படித்தனர். பின்பு தாசீல்தார் அவரைச் சென்னைஹைஸ்கூலுக்கு அனுப்பினர். இங்ஙனம் அவர் செய்ததற்குக் காரணம் யாதோவெனின், நமதையரிடமமைந்துவிளங்கிய சான்றோர் திறனுடையரென்னுந்தேசேயாம். இத்திறன் நமதையரிடமமைந்திருத்தலைத் தாசீல்தார் நன்கறிந்து கொண்டவராகையால் அதனை விருத்திசெய்விப்பின் அது பலருக்கும் பயன்படுவதாகுமெனக்கருதி அதில் மிகவுந் தமது ஊக்கத்தைச் செலுத்துவாராயினர். இங்ஙனம் அவ்வருமைமுத்தினிடம் பேரன்புபூண்டு அவருக்கு அபிமானபிதாவாகிய தாசீல்தார் அவரைச் சென்னைக்கு அனுப்பும்போது அவரிடம் இராசா ஸர் K.C.S.I. மாதவராயரு

க்கு ஒருகிள்ளாக்குத்தந்தனுப்பினர். நமதையர் அதனை அதிக மரியாதையுடன் பெற்றுக்கொண்டுசென்று அவ்விராயர் அவர்களிடங்கொத்து அவர்மூலமாக மேற்கண்ட சர்வகலாசாலையைச்சேர்ந்து,

(8) "கோடன்மரபே கூறுங்காலைப்
பொழுதுடன்சென்று வழிபடன்முனியான்
குணத்தொடுபழகியவன் குறிப்பிற்சார்ந்து
இருவெனவிருந்து சொல்லெனச்சொல்லிப்
பருகுவனன்ன வார்வத்தனாகிச்
சித்திரப்பாவையி னத்தகவடங்கிச்
செவிவாயாக நெஞ்சுகளனாகக்
கேட்டவைகேட்டவை விடாதுளத்தமைத்துப்
போவெனப்போத லென்மனார்புலவர்."

என்ற சூத்திரத்திற்கு இலக்கியமேயாம்; என்று கற்றோர்யாவரும் புகலும்படி யமைந்து தமதுபாடங்களைப் போற்றுவாராயினர்.

முற்கூறப்பட்ட ஸர்-ஹென்றிமாண்ட் கோமரிதுரைக்குத் தஞ்சாவூர் ஜில்லாவின்மீது அபிமானமதிகம்; அதினும் அச்சில்லாவிலிருந்து சென்னையில்வந்து படிக்கு மாணவரிடங்காட்டும் பிரியமதிகம். அதினும் பதின் மடங்கதிகமான அன்பை முன்தமதபிமானத்திற் குரிய பொட்ளராயிருந்த தாசீல்தார் முத்துசாமிநாயக

ரால் அனுப்பப்பட்ட முத்துசாமிஐயரிடம் வைத்திருந்தனர். இதுவும் நமது ஐயரது விருத்திக்கு ஓர்காரணமாயிற்று. கூடுங்காலத்தில் யாவுமொருங்குகூடுவது உலகத்தியற்கையன்றோ? துரையவர்கள் நமதையரின்மீதே மிக்க நோக்கமுடையவராயினர். ஐயரும் மடியாவூக்கத்துடனும் தமதூக்கத்திற்குதவியாக இடையூறின்றியேற்பட்ட அநுகூலங்களினாற் றூண்டப்பட்ட வுற்சாகத்துடனும் பலகலைகளையும் பயின்றுதேர்ந்தனர். ஐயர்,

(9) “எண்ணென்ப வேனை யெழுத்தென்ப விவ்விரண்
டுங்—கண்ணென்ப வாழு முயிர்க்கு,

என்று பொய்யாமொழியிற் புகழ்ந்துரைக்கப்பட்ட இலக்கணத்திலும் கணிதத்திலு மிகவுஞ்சமர்த்தர். வானசாஸ்திரத்தின் மிக்கவிருப்புடையவர். ஏனைகலைகளினும்வல்லவர். அவர்தாம்கற்றகலைகளை மறைப்பெனுங் கள்வனுக்குப் பறிகொடுப்பவர் அல்லர். அவர்மிக்கநற்குணசீலர். நல்லொழுக்கமே தமக்கு அணியெனப்பூண்டவர். தமதபிமானபிதாவாகிய தாசீல்தார் தமக்குக் காலத்திற் செய்த அவ்வுத்தமோத்தமமான வுதவியை என்றுமறவாதவுள்ளத்தினர். தாசீல்தார் நமதையருக்குச் செய்த வுதவியானது கன்மேலெழுத்துப் போலென்றுமழியாமல் விளங்குவதாயிற்று. “நல்லாரொருவருக்குச்செய்த வுபகாரம் கன்மேலெழுத்துப்போற்காணும்” என்ற

ஆய்மொழி மாய் மொழியாமோ? அதனால் அவரதுபுகழும் ஐயரதுகல்வியறிவு முற்பிறையெனப் பொற்புடன் வளர்ந்து விளங்குவனவாயின. நமதையர் "ஆயிரத்தொன்றும் புலவர்." தாசில்தாரும் "கோடிக்கொருவராந்தாதா." "இட்டவெல்லாம்பயிராமா?" "பெற்றவெல்லாம்பிள்ளைகளாமா?" நமதையரைப்போன்ற யானைக்கன்று ஒன்றேயாயினுமமையும். அல்லாத சுகரக்குருளைகள்பலவற்றாற்பயனென்? "பாத்திரமறிந்துபிச்சையிடு" என்றபழமொழியை நன்குணர்ந்தவர் அத்தாசில்தாரே: அதற்குத்தக்க பாத்திரமானவரும் நமதையரே: நமதையர் இங்ஙனம்ஒப்புரவொழுகிமூத்தோர்சொல்வார்த்தையமுதெனக்கொண்டு, யாவர்க்குநல்லவராயிருந்து பலரும்புகழும்படி கணக்கிலடங்காதவெகுமதிகளைவாரி வாரிக்கட்டிக்கொண்டு, வருடந்தோறும் (ஸ்காலர்ஷிப்பு) மாணவர்க்குரிய உபகாரச்சம்பளமும்பெற்று, ஒருவகுப்பிலாயினும் தவறி இரண்டுவருடங்கழிற்றலின்றிப்பிரதி வருடமும் உயர்ந்த வகுப்புகளுக்குத் தாவித்தாவிச்சென்று, அவற்றின் சிரோபூஷணமாய் விளங்கிவந்தனர். இது கருவிற்றிருவுடைமையைக்காட்டுகின்றதன்றோ? அவரது தீவிரபுத்தியைநன்குணர்ந்தவராகிய அப்பாடசாலையின்றலைமை உபாத்தியாயர்-மிஸ்டர்—பவ்வல்துரை "முத்துசாமி அபாரவல்லமையுடையவன்" எனப் பன்முறையும்படிப்போர்முன் கூறுவாராயினர். அம்மட்டோ?

அவ்விளஞ்சீடரைச் சிறிதுநேரமும் விட்டுப்பிரிந்திருக்க மனமிலாதவராய் இரவிலு மவரை நெடுநேரம் தம்முட னிருத்திக்கொண்டு மிக்கநேயத்தோடு சரசமாய்ப்பேசிக் கொண்டிருப்பர். சிலசமயங்களில் அத்துரையவர்கள் அவ்வுத்தம மாணவருடன் இரவு பத்துமணிவரையி லும்பேசிக்கொண்டிருந்து பிறகுஅம்மாணவரைத்தமது வண்டியிலேற்றிக்கொண்டுசென்று மயிலாப்பூரின் அம் மாணவர் தங்கியுள்ள இல்லத்தின்கண் விட்டுவிட்டுத் தமது இல்லிற்குத் திரும்புவர். இங்ஙனம் நமதையர் தமது போதகாசிரியருடன் கூடிப்போக்கும் நேரத்தை யும் பாடசாலைக்குப் போகும் காலத்தையுந்தவிர்த்த மற் றையவேளைகளிற் றமதபிமான பிதாவாகிய தாசீல்தாரு க்கு இனியநண்பராகிய மாதவராயரது மனைக்கட்சே ன்று அவருடன்கூடிச் சம்பாஷிப்பதும் படிப்பது மெழு துவதுமாயிருப்பர். இங்ஙனம் ஐயரவர்கள் அவருடன் கூடிச்செய்வன பயனற்றனவாயிரா. ஒவ்வொன்றும் தம க்கும் பிறர்க்கும் பயன்படுவனவாகவேயிருக்கும். இப் பொழுது திவானகவிருக்கும் இரகுநாதராவும் அவர்க ளுடன்கூடுவர். அத்தகையோர் கூடியிருக்குங் காட்சி யைக்காண்பதே கண்செய்தபாக்கியமாம். அவர்கள் பே சுவதைக்கேட்பதே செவிபுரிந்த தவமாம். அவர்கள் கூடிப் பொறிப்பதைப் படிக்கின் நாவிற்குச் சுவையூ றும். சிந்திக்கின்அறிவேறும். இங்ஙனம் நமதையரிடம்

"நல்லவெளிப்படுத்துத் தீயமறந்தொழிந்து" அருள் வட்டமாக வறிவுகதிராய்ப் பொருள்வட்டமெல்லாம் விளக்கி இருள்வட்ட மாற்றுமறிவான ஞானவள ரொளி வந்துவிட்டமையால், அவர் தமது குருவுக்குக் குருமணியாயும் தமது நண்பருக்கெல்லாம் நன்மணி யாயும் தமது அபிமானபிதாவுக்கு அரும்பெறன்மணி யாயும் மற்றெல்லோர்க்கும் என்மணியாயும் விளங்கினர். அவர் கல்விபயிலுதற்கென ஏற்படுத்திக்கொண்ட இட ங்கள் இன்னுமிரண்டுள; அவற்றை அறிவார்க்கு அக் காலத்தில் அவ்விளமாணவருக்கு உற்றிருந்த நிலைமை யின் மிக்கபரிதாபமும் அம்மிடியினும் வடியாதிருந்த அவரதுமனவுறுதியில் அதிகவியப்புந்தோன்றும்.

அவ்விடங்களில் ஒன்றுவது: - வீதியிற் காற்றுக்கும் மழைக்கும் அசையாமல் நாட்டப்பட்டுள்ள தீபஸ்தம் பமே. இரவிற் குருமனையிலிருந்து வந்தபின்பு அக்கம் பவிளக்கங்களை யணுகிநின்று இதுவேயின்பமென வாசி ப்பர். அவர் செயற்கரிய செய்யும் பெரியர். இவ்விஷயத் தில் அவரையொத்தவர் அவரே. கடலுக்குவமை கட லேயன்றோ?

(10) "மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்டுஞ்சார்
எவ்வெவர் தீமையு மேற்கொள்ளார் - செவ்வி
அருமையும் பாரா ரவமதிப்புங் கொள்ளார்
கருமமே கண்ணாயி னார்" என்றபடி

அவர்தாம் தொடங்கிய காரியத்திற் நமக்குண்டாகும் மெய்வருத்த முதலியவற்றைக் கவனியாது அக்காரியத்தைச் சாதிப்பதிலேயே மனமுடையவராயிருப்பார்.

இரண்டாவது:—அவர் தங்கியுள்ள மயிலாப்பூரில் இருக்கும் திருக்கோயிலிலுள்ள ஒதுக்கிடமே. இவ்வொதுக்கிடங்களைப் பகற்பொழுதிற் றனித்திருந்து படிப்பதற்கான இடமாக வைத்துக்கொண்டனர். அவ்வாலயத்தினுள்விளங்கும் விருக்ஷங்களினிழலிலிருந்து கருந்தாமரையையொத்த கருணைநிறைந்துததும்பும் கண்ணிணைகளையுடைய சகலகலாவல்லியின் றிருவடியாகிய செந்தாமரைமலருக்குத் தமதுமனமாகிய மடுவை உறைவிடமாக்கி, அத்தேவியைநாடி, "அடிவேதநாறுஞ் சிறப்பார்ந்தவேத மனைத்தினுக்குமுடிவே! தவளமுளரிமின்னே! முடியாவிரத்தினவடிவே! மகிழ்ந்துபணிவார்தமது மயலிரவின்விடிவே! அறிந்தெனையாள்வார் தலந்தனில்வேறிலை; அடியேன் உன்னையே நம்பினேன். பூதலத்தில் வைக்கும்பொருளும் மற்றெப்பொருளும் பொய்க்கும் பொருளன்றி நீடும்பொருளல்ல; நீதரும் கலைப்பொருளே மெய்க்கும்பொருளும் அழியாப்பொருளும் விழுப்பொருளும் உய்க்கும்பொருளுமாகும் எனவுணர்ந்து, அடியேன் அக்கலைப்பொருளையே விரும்பி நின்னைச்சரணென வடைந்தனென்; பாதாம்புயத்திற் பணிவார்தமக்குப் பலகலையும் வேதாந்தமுத்தியுந் தந்தருள்பாரதியே!

அடியேற்கு அதனைத்தந்தருள்க" என்று துதிப்பர். அவர் சகலகலாவல்லியின் தொண்டுபுரிவதிலேயே தமது பொழுதையெல்லாம் போக்குவர். அத்தேவியும் தொண்டர்தந்நாவினுநெஞ்சினு நின்று அவர் வேண்டியன யாவுந்தந்து காப்பவளாதலின் நமது ஐயரவர்களைச் சென்னை ஹைஸ்கூலாரால் அக்காலத்திற் கொடுக்கப் படாநின்ற புரவின்ஷியர் முதல்வகுப்புச் சர்டிபிகேட்டுக்கு உரியராக்கினள். இதுவன்றோ? தெய்வபலம்.

"துதிமேவு புத்தியது சேரிலெவருக்குமே தோன்ற வருதெய்வமுண்டாம்" என்று பெரியோர்கள் கூறிய வாக்கியம் பொய்படுவதாமோ? அவருக்கு அந்த யோக்கியதாபத்திரத்துடன் ஒருகணையாழியுங் கொடுக்கப்பட்டது. இது, சிறியதிருவடியாற் கணையாழிபெற்ற வைதேகியின் களிப்புக்கு சமமானகளிப்பை அவருக்குண்டாக்கிற்று. அவற்றுடன் அவர் ஒரு மோளிப்புத்தகங்களையும் வெகுமதியாகப்பெற்றுக் கட்டிச் சுமந்துகொண்டு வீட்டுக்குச்சென்றனர். இதுநிற்க; 1850 ஹூத்தில் வித்யாவாலோசனைச்சபையார் "இங்கிலீஷ் ஜனங்களின் துன்மார்க்கமும் அது நிவர்த்தியாவதற் கேற்றமார்க்கமும்" என்னும் விஷயத்தைக்குறித்து ஒருசிறந்த வியாசம் எழுதுகின்றவர்களுக்கு ரூபா 500 - பரிசளிப்பதெனத் தீர்மானித்தனர். இச்செய்தியை அறிந்த நமதையர் அதிக சாமர்த்தியமாக ஒரு வியாசமெழுதிமுடித்து

அச்சபையார்கட்கு அனுப்பினர். அவ்வியாசத்தை அச்சபையார் சிறிதும்விடாமல் முற்றும் நன்றாய்க் கவனித்தார்கள். அச்சபையார்களில் ஒருவரேனும் அதில் வித்தியாசமான அபிப்பிராயங் கொள்ளாமல் இதுவேதக்கது; இஃதே ஏற்றது; இதுவே நன்று; இதுபோல்வதின்று, என வொப்பினார்கள். ஆதலின் அந்தவெகுமதி ரூபாஐந்நூற்றுக்கும்நமதையரே உரியவராயினர். சென்னை ஹைகோர்ட்டுஜட்ஜிகனம்-ஹால்லோவே துரையவர்கள் "மிஸ்டர் முத்துசாமிஐயர் எந்நாட்டினர்? எவ்வூரினர்? அவர் மிகவுஞ்சிறந்த பெருமையினை யடைதற்குரிய நுண்ணறிவாளர்களில் ஒருவராயிருக்கின்றனர்" எனக்கூறிப்புகழ்ந்தனர். பிறகு அத்துரையவர்களும், டைரெக்டர் ஆப் பப்ளிக் இன்ஸ்ட்ரக்ஷன் - ஸர்- அலக்ஸாந்தர் அர்பத்நட்டு துரையவர்களும் நமதையருடைய வித்யாபிவிர்த்தியைச் சதாகவனித்துவருவா ராயினர். நமதையருக்குப் பரிசளிக்கப்படும் போதே "முத்துசாமிஐயர் ஸர்க்கார் உத்தியோகமனைத்திற்கும் உரியவர்." என்பது கெசட்டிற் பிரசுரிக்கப்பட்டது.

பரிசாய்க்கிடைத்தபொருளை நமதையரது கரத்திற் கொடுக்கும்போது அவரது போதகாசிரியராகிய பவ்வல் துரையவர்கள் "இதுவேயுன்னுடைய சகல ஐசுவரியங்களுக்கும் வித்து என்று நான் நம்புகின்றேன்" என்று கூறி அன்புடன் ஆசீர்வதித்து அளித்தனர். அவ்வாறே

அதுவே நமதையரவர்கட்கு உலவாக்கிழியாயிற்று. அவர் தமதந்தியகாலவரையினும் அதிலிருந்து ஒருபைசாவையும் எடுத்துச் செலவிட்டிலர். அதனை ஒரு பேழையிற் சேமித்துவைத்தனர். அதன்மீது தமது கரகமலங்களைச்சேர்க்காமற் றமது மனத்தினும் அப்பேழையினும் என்றும் பொருள் குறைவுபடாமல் இருத்தல்வேண்டுமென மலராசனிகளிருவரையும் தமது மனவாசனத்திலமர்த்தி வாழ்த்திவந்தனர். பின்பு மிஸ்டர் பவ்வல் துரையவர்கள் நோன்பெருங்கலைகளின் மாண்பமையறிவும்,காசறுசிந்தையும்தேசுறுபுகழும்,நாடோறுமோங்கி வளரப்பெற்ற நமதையரவர்களைச் சீர்மையிற்சென்று வாசித்துச் சிவில்சர்விஸ் பரீக்ஷையிற் *றேறிவரும்படி தூண்டினர். அக்காலத்து நமது இந்துதேசத்துப் பிள்ளைகள் கடல்கடந்துசென்று வேற்றுத்தேயத்தையணுகி அங்குச் சிலகாலந்தங்கியிருந்து ஓதிவருதற்குரிய மனத்திடங்கொண்டவர்களல்லர். அதினும் பார்ப்பனச்சிறுவர்கள் "புலத்திற்சிறந்த புரிநூன்முதல்வர்க்குக் கலத்திற்சேறல் கடனன்று" என்னுங் கொள்கையினமைந்தவர்களாதலின் அக்காரியத்துக்குட்படுவது அருமையினுமருமையே. அன்றியும் ஐயரவர்கள் இளமையிலேயே விவாகஞ் செய்விக்கப்பெற்றவர். ஆதலின் அவர் அதற்கொருப்படாரென்பதை அத்துரையவர்கள் தாமேயோசித்துணர்ந்து அவரைத் தமது கல்லூரியிற் றம்மோடு

உதவிபோதகாசிரியாக விருக்கும்படி நியமித்தனர். ஐயரவர்கள் தமதாசிரியரது நியமப்படியே சிலகாலமிருந்துபின்னர் அதினின்றுநீங்கித் தஞ்சாவூர்க்கலெக்டர் ஆபீசு ரிகார்ட்டுகீபராயினர். அதன்பிறகு டைரக்டர்ஸ் அலெக்ஜாண்டர் துரையவர்கள் 1856ஹூத்தில் அவரை நூற்றைம்பது ரூபாச்சம்பளமுள்ள ஸ்கூல் டிப்டி இன்ஸ்பெக்டர் வேலையில் அமர்த்தினர். நமதையர் அவ்வேலையைப் பார்த்தபோது அவர் பெற்ற பெரும்புகழை மற்றியாவர் பெற்றனர். அதேவருடத்தில் வக்கீல் பரீக்ஷையும் ஏற்பட்டது. அப்பரீக்ஷை சென்னைமுதலிய இடங்களிலேயேயன்றிக் கும்பகோணத்திலும் டிஸ்ரிகட் ஜட்ஜி மிஸ்டர் பிச்சான் துரையவர்கள் கண்ணோட்டத்தின்கீழ் நடைபெற்றது. அப்பரீக்ஷைக்கு அநேகர் போயினர். அவருள் வெற்றிபெற்றவர் மூவரே: அம்மூவருள் முதன்மைபெற்றவர் நமதையரவர்களே: இரண்டாவதாகத் தேர்ந்தவர் இப்பொழுது திவானுயுள்ள இரகுநாதராவ் அவர்கள். பொன் எப்படிச்செய்யப்படினும் தானே மற்றைய லோகங்களெல்லாவற்றினும் சிறந்துவிளங்குவதுபோல நமதையரவர்கள் தாஞ் செய்யத்தொடங்கிய எல்லாக்காரியங்களினும் தாமே முதன்மையுற்று விளங்கினர். மேற்குறித்த ஜட்ஜி துரையவர்கள் அவரது பேராற்றலைப்பற்றி மிகவும் வியந்துகூறி, அவரைத் தூத்துக்குடியில் தாலூக்

கா முனிசீப்புவேலையில் அமர்த்தினர். வித்யாவிலாகா விலிருந்த நமதையருக்கு முனிசீப்புவேலை கொடுக்கப் பெற்றதென்றால் அவரது திறமை எத்தகையதா யிருந் திருந்தல் வேண்டும். அவரைப் பெற்றவர்களன்றோ? பெரும்புண்ணியர். அவர் தாம் பிறந்த குடியைப் பெருங்குடியாக்கினர். சொல்லானது தன்னுற்றலால் தன்னையும் விளக்கித் தனதகத்துப் பொருளையும் விளக்குதல்போன்று அவர் தமது அறிவினுற்றலாற் றம்மையும் விளக்கித் தமது குடியையும் விளக்கிவைத்தனர். நமதையரவர்கள் அவ்வேலையி லமர்ந்தபிறகு மேற்கண்ட ஜட்ஜி துரையவர்கள் அவரது பேராற்றலை முற்றும் நன்குணர்ந்தவராயினர். எவ்வாறெனின், அக்காலத்தில் ஜட்ஜிகள் முனிசீப்பு கோர்ட்டுகளைப் பரிசோதிக்கப் போவார்களாயின் முனிசீப்புகள் இடியோசைக்கேட்ட பைந்நாகம்போ லஞ்சிநடுங்குவார்கள்; அவர்கள் வயிற்றிற் றீப்பற்றியெரியும்; தேகமுழுவதும் வெயர்வை மீக்கொண்டொழுகும்; அவயவங்கள்யாவுஞ் சோர்ந்தயரும்; எழுதக் கையுமெழாது; பேச நாவுமெழாது; எழுத்துஞ் சொல்லும் அவர்களைவிட்டுச் சேய்மையினீங்கிநின்று நகையாடும்; அவர்கள் ஒன்றையெடுக்கவெண்ணி மற்றொன்றையெடுப்பார்கள். அக்காலத்திலவர்கட்குண்டாகும் நடுக்கம் தொண்ணூறுஞ் சென்ற கிழவர்களுக்கும் வேண்டியவளவு ஐயமிடக் கூ

டியதாயிருக்கும். நமது கோர்ட்டிச்கு வருகின்ற ஜட்ஜி துரையவர்களின் பொட்ளர்களாகிய தெய்வங்கட்குப் பிரார்த்தனை செய்துகொண்டு காணிக்கையுடனே பாத பூஜைசெய்வார்கள். அத்தெய்வங்கள் அப்பூசையை ஏற்றுக்கொண்டு நல்வரமளித்தபின்னரே அவர்களைக்கொண்டு ஜட்ஜிதுரையவர்களைப் பார்ப்பார்கள். அங்ஙனம் பார்த்தும் அருகுற்றாரில்லார்கள். நமதையரவர்களோ? அன்னதன்மையின ரல்லர். ஒருகால் மேற்கண்ட டிஸ்ரிக்கு ஜட்ஜி மிஸ்டர்-பிச்சான் துரையவர்கள் எவருக்குந் தெரிவியாமல் திடீரென நமதையவர்களின் கோர்ட்டுக்கு வந்து ஒவ்வொரு இலாகாவையும் பார்வையிட்டனர். பிறகு ஐயரவர்களின் விசாரணையின் திறத்தைத் நேரிற்காணவிரும்பி அவருடன் வீற்றிருந்தனர். ஐயரவர்கள் அதைக்கண்டஞ்சாது மனத்திட்பமுடையவராய்த் தாமன்று விசாரிக்கப்புகுந்த வழக்குகளை முறையாக விசாரித்து முடித்தனர்.

(11) “வினைத்திட்ப மென்பதொருவன் மனத்திட்ப
மற்றைய வெல்லாம் பிற”

என்றபடி ஒருவன் தான்செய்யத்தொடங்கிய காரியத்தின் மனத்திட்ப முடையவனாயினன்றே அவன்செய்யத்தொடங்கிய அவ்வினையுந் திட்பமெய்தப் பெறுவது. ஐயரவர்கள் அங்ஙனம் மனத்திட்பமுடையராய்ச்செய்த அவ்வினையின் றிட்பத்தை அந்த ஜட்ஜிதுரையவர்கள் கண்டு,

(10) "வீறெய்தி மாண்டார் வினைத்திட்பம் வேந்தன்க
ணூறெய்தி யுள்ளப் படும்"

என்றபடி அவரை நன்குமதித்து, அவரை விட்டுப் பிரிய மனமில்லாதவராய், அவருடன் நெடுநேரம் வீற்றிருந்தனர். இப்படி அத்துரையவர்கள் ஐயருடன் நெடுநேரம் வீற்றிருந்து அவரது விசாரணையின் றோரணையை அமைவுறப் பார்த்துக் களிகூர்ந்து அவரிடம், விடைகொண்டு தஞ்சைக்குச் சென்று "ஒரே ஆசனத்திலென்னோடு சமமாக வீற்றிருந்து நீதிமொழியத்தக்கவர்களின் முத்துசாமி ஐயரும் ஒருவர்" எனத் தமது மேலான அபிப்பிராயத்தை வெளியிட்டுரைத்தனர். பிறகு ஐயரவர்கள் 1851-ம் வருடத்தின் முதல் ஆற்காட்டுக்கும் பின்னர் தஞ்சாவூருக்கும் டிப்டிகலெக்டராக நியமிக்கப்பட்டனர். இங்ஙனம் நம்மையர் டிப்டிகலெக்டராக விருக்கையில் சாவுகாரொருவர்மீது மோசடிக் குற்றஞ் சாட்டப்பட்டு அது விசாரணைக்குவர; அதனைக் கலெக்டர் மிஸ்டர் மாரிஸ் துரையவர்கள் நம்மையரிட மனுப்பினர். அவர் அதனை விசாரிக்கையில் எதிரிக்காக மிஸ்டர ஜான் புருஸ் நார்டன் துரை வந்தனர்; அவர் நியாயவாத சிங்கமெனப் பெயர்பெற்றவர். நம்மையரவர்களால் பதினைந்துநாள் அவ்வழக்கு விசாரிக்கப் பெற்றுக் கடைசியாகச் செஷனுக்குக் கமிட் செய்யப்பட்டது. ஐயரவர்கள் அக்கேசை விசாரிக்கும்போது

அவரது விசாரணையின் விதரணையை நன்கு கவனித்து வந்த ஷை நார்ட்டன் துரையவர்கள் தாம் சென்னைக்கு வந்ததும் தமது நண்பர்களாகிய ஜட்ஜி கனம் ஹால்லோவே துரையவர்களையும் ஸர் - அலக்ஸாந்தர் துரையவர்களையுங் கண்டு அவர்களிடத்து "ஜஸ்டிஷியல் சம்பந்தமான மதிநுட்பங்களும் சாதுர்யங்களும் ரெவினியூ இலாகாவில் முற்றும் ஒருபயனுமின்றிக்கழிகின்றன." என்றுகூறி ஐயரது குணாதிசயங்களை அவர்களுக்குப்பசுமரத்தாணியெனமனதிற் பதியும்படிநன்கெடுத்துரைத்தனர். அங்ஙனம் அத்துரையவர்கள் பிரஸ்தாபித்த காலத்தில் மங்களூர் சப்கோர்ட்டுக்கு அறிவினும் அனுபவத்தினும் சிறந்த ஜஸ்டிஷியல அதிகாரியொருவர் வேண்டியதாயிருந்தது. ஆகூழாங்கால்யாரேயதனைத் தடுப்பவர். 1865-ம் வருடத்தில் ஐயரவர்கள் அங்குச் சப் ஜட்ஜியாக அனுப்பபெற்றனர். அதன்பிறகு 1868-ம் வருடத்தில் சென்னைப் போலீஸ் மேஜஸ்திரேட்டாக நியமிக்கப்பட்டனர். அதிலிருந்துகொண்டு ஜட்ஜி-கனம் ஹால்லோவே துரையவர்களின் உரையின்படி நீதிசாஸ்திரத்தை (ஜூரிஸ்புரூடன்ஸன்) ஓதியுணர்ந்தனர். அச்சாஸ்திரத்தின் முதனூல் ஜர்மனிபாஷையில் எழுதப்பட்டுள்ளது. ஆதலால் அப்பாஷையைக்கற்றால் அச்சாஸ்திரத்தை நன்குணரலாமென வுன்னி அப்பாஷையையுந் தெளிவாகத் தெளிந்தனர். அவர் படிப்பிற் பேராசைகொண்டு திரிந்தவர்.

கடவுளுக்குந் தமது மனசாக்ஷிக்கு மல்லது மற்றவர்களின் தயவுக்குங் கண்ணோட்டத்திற்கும் பயந்தவரல்லர். அதனை விளக்குவதற்கான உதாரணமொன்றை ஈண்டு உதகரிக்கின்றேன்.

சென்னை ஹைகோர்ட்டு ஜட்ஜிகளிலொருவர் தமது மாளிகையி னுணுழைந்த ஒருவனை நன்றாயடித்துவிட்டனர். அடிபட்டவன் மேஜிஸ்திரேட்டாயுள்ள நமதையரவர்களின் கோர்ட்டில் தன்னையடித்த ஜட்ஜியின்மீது பிரியாது கொடுத்தான். அக்கோர்ட்டார் அதையேற்றுக் கொண்டு அந்த ஜட்ஜிக்கு ஸம்மன் அனுப்பினர். அச்சமயத்தில் தம்மினுமுயர்ந்த மேஜிஸ்திரேட்டாயுள்ள துரையொருவர் அந்த ஜட்ஜிக்கு ஸம்மனனுப்புதல் தக்கதன்றெனப் பன்முறை கூறினர். கூறியும் நமதையரவர்கள் நீதிநூலிற் றமக்குள்ள வன்மையினாற் றமக்குண்டாயிருக்கும் தைரியத்தைக்கொண்டு அத்துரையவர்களின் கூற்றைப் பொருட்படுத்தாது,

(11) "ஓர்ந்துகண் ணோடா திறைபுரிந் தியார்மாட்டுந்
தேர்ந்துசெய் வஃதே முறை."

என்றபடி கண்ணோடாது நடுநிலைமையைப் பொருந்தி மேற்குறித்த ஜட்ஜிக்கு ஸம்மனனுப்பி அவரை வரவழைத்து அவர்சொல்லையு மவர்மீது பிரியாது கொடுத்தவனது சொல்லையுந் தீரவிசாரித்துச் சிக்ஷக்கி.

(12) "குடிபுறங் காத்தோம்பிக் குற்றங் கடிதல்
வடுவன்று வேந்தன் றொழில்."

என்ற பொய்யாமொழியை யுட்கொண்டு அந்த ஜட்ஜிக்கு மூன்றுரூபாய்அபராதம் விதித்தனர். அவரன்றோ? நீதிபதியெனத் தக்கவர்.

(13) "இறைகாக்கும் வையக மெல்லா மவனை
முறைகாக்கு முட்டாச் செயின்."

என்ற மெய்ம்மொழியைநமதையர் ஐயமின்றியுணர்ந்தவராதலின், இவ்வாறே சிறிதும் நடுநிலைமையிற் சிறுகாது கடவுளுக்கும் மனசாக்ஷிக்கும் பயந்து குற்றஞ்செய்தாரை யொறுத்து, அவர்களாற் றுன்பெய்தித் தம்மைவந் தடைந்தவர்களின் றுயரைக் களைந்து நீதிபதிகட்கெல்லாம் அதிபதியாக விளங்கிவந்தனர். இங்ஙனமிருக்கையில் அம்மம்ம! அவரது சமர்த்தென்னே? அவர் எவ்வாறுபடித்தனரோ? படிக்கக்காலம் அவருக்கு எப்படி வாய்த்ததோ? தெரிந்தில: B. L. பரீக்ஷைக்குப்போய் அதின் முதல்வகுப்பிற்றேறினர்.

இப்படி நமது ஐயரவர்கள் அப்பரீக்ஷையிற் றேர்ந்ததைக்குறித்து நாட்டன் துரையவர்கள் வியந்து வியந்து பேசினர். பிறகு ஐயரவர்கள் ஸ்மால்காஸ் கோர்ட்டு ஜட்ஜியாயினர். அவ்வேலையிலும் அவர் ஒருசிறிதுங் குறைகூற விடந்தராது மிக்கபக்குவமாக விளங்குவதைக்கண்ட மதராஸ் ஆக்டிங்கு கவர்னர் ஸர்-அலெக்ஸாந்தர்

ஆர்பத்நட் துரையவர்கள் அவரைத் தஞ்சாவூர் ஜட்ஜி யாக்கமுயன்றனர். பலாராக்ஷேபனையினால் துரையவர் களின் எண்ணம் பலியாதாயிற்று. 1877-ம் வருடத்தில் டில்லிநகரிற்கூடிய இராஜமகாசபைக்குப் போகும்படி மதராஸ் கவர்மெண்டார் நமதையரவர்களை வேண்டி னர். ஐயரவர்கள் அதற்கிணங்கி அவ்விராஜமாசபைக்குச் சென்று அச்சபையிற் கவர்னர் ஜனரலவர்கள் பரிசாக வளித்த பொற்பதக்கத்தைப் பெற்றுக்கொண்டு சென் னைவந்தடைந்தனர். அடுத்தவருடம் அவருக்கு C. I. E. பட்டம் அளிக்கப்பட்டது. இப்பட்டத்திற்கேற்ற சன்னதைக் கொடுக்குங் காலத்தில் சென்னை கவர்னர் பகிங்காம்பிரபு ஜஸ்டிஷியல் இலாக்காவின் விசேஷத் தை எடுத்துக்கூறி அதில் நமதையரவர்கள் மிகவுந் தெளிவுற்று யாவரும் நன்கு மதிக்கும்படி சிறந்திருப் பதை வியந்துரைத்து, "இவர் மகாராணியார் மனமுவ வந்தளித்த மரியாதையைக் கொண்டு நீடூழிவாழ்வா ராக" என வாழ்த்தினர். அதே வருடத்தில் நமதைய ரவர்கள் ஹைகோர்ட்டு ஜட்ஜிகளில் ஒருவராக நியமிக் கப்பெற்றனர். சென்னையிராஜதானியின் மக்களில் நமதையரவர்களே முதன்முதல் சென்னை ஹைகோர் ட்டு ஜட்ஜியாக வீற்றிருந்து விளங்கியவர். இப்பதவி யுற்று நீதிசெலுத்தும் நீதியதிபர்களின் காரியங்கள் தெய்விகம் பொருந்தியவையென்பதை நமதையரவர்

களை நன்கறிந்தவராகலின் நாம் வீற்றிருந்து நீதிமொழி யும் ஸ்தானத்தை ஞாயத்திருக்கோயிலென்பர். இங்ஙன மவர் இவ்வுன்னதமான பதவியிற் பதினேழுவருடகா லம் நமது நாட்டுக்கோர் ஆபரணமாக விளங்கினர். 1893-ம் ௵த்திற் சென்னை ஹைகோர்ட்டுப் பிரதம ஜட்ஜி சீமைக்குச் சென்றிருந்தகாலத்தில் நமதையரவர் கள் அவ்வேலையிலும் அமர்ந்திருந்து, தமது தாய் தம் மாற் கொடுக்கப்பெற்ற ஒரு ரூபாய் வேதனத்தை இஷ்ட த்துடன் பெற்று, "இதுவே, பத்து நூறு ஆயிரம் ஐயா யிரமுமாம்" என மதித்து மகிழ்ந்த மகிழ்ச்சியைப் பூர்த்தி செய்தவராயினர். விரைவில் K.C.I.E. பட்டமும் அணி யப்பெற்றனர். அந்தோ! அவர் திடீரென்று நோயுற்று 1895-ம் ௵ முதலில் இம்மண்ணுலகை விட்டு நீங்கி விண்ணுலகமடைந்தனர். இதை ஈண்டு விரித்துக் கூற நாவெழுந்திலது. நமது ஐயரவர்களின் விருத்தியை விருத்தியாக வசனித்தும் எழுதியும் சிந்தித்துமகிழ்ந்த நாம் அவர் க்ஷயத்தை எவ்வாறுவிரித்துக் கூறத்துணி வோம். அவர்குணவிசேஷங்களே பன்முறையும்பாரா ட்டற்பாலனவாகலின், அவற்றை ஒருவாறுதொகுத்துக் கூறுவோம்.

சர்-முத்துசாமி ஐயரவர்கள் ஒருமகான். அவர் ழ்து வாமிசத்தோடு பிறந்த ஒருமானுஷ சிரேஷ்டர். தமது விடாமுயற்சியினாற் சகலமுங் கூடிவரப்பெற்றவர். அ

வர் கல்வி கேள்வி அறிவுடைமை குற்றங்கடிதல் பெரியாரைத்துணைக்கோடல் சிற்றினஞ்சேராமை தெரிந்து வினைசெயல் நடுநிலைமை ஊக்கமுடைமை மடியின்மை ஆள்வினையுடைமை இடுக்கணழியாமை மனத்திட்பம் வினைத்திட்பம் முதலிய நல்லியல்களியாவு மொருங்கமையப் பெற்றவர்.

அன்றியும், அவர் சுருக்கரிலேகேள்வித்துகடீர் புலவராதலின், சென்னையூனிவர் சிடியின்மீது பற்றதிகங்கொண்டிருந்தனர். அதன் பெல்லோவாகவும் விளங்கினர். சின்டிகேட் மெம்பராகவுந் துலங்கினர். பலவாண்டுகளின் B.L. M.L. என்னும் பட்டபரீக்ஷா கருத்தராகவிருந்து, அப்பரீக்ஷைக்குப் போகின்றவரின் ஞாயவறிவை அளவெடுக்குங் கருவியுமாக விருந்தனர். கான்வோ கேஷன் அட்ரெஸ்ஸையும் வாசித்தனர். அவர் சிறந்த வாக்கியல்லராயினும் அவரெழுதிப்படிக்கும் வியாசங்க ளொவ்வொன்றும் பொறுக்கியெடுத்த சொல்லடுக்குகளமையப்பெற்று, ஆழ்ந்தகருத்துகளை யுள்ளடக்கிக் கொண்டு, கேட்பார்க்கும் படிப்பார்க்கும் இன்பம் பயந்துநிற்கும். ஐயரவர்கள் தமது காலத்திலிருந்த மகான்களாவொருவரைப்பற்றியும் மிகவும் புகழ்ந்தேபேசுவா. அடிக்கடி தமது போதகாசிரியராகிய மிஸ்டர் பவ்வல் துரையவர்களின் சீரெல்லா மெடுத்துத் தூற்றுவர். வித்யாசம்பந்தமான சகல பிரசங்கஙகளிலும் அத்

துரையவர்களுக்குத் தமது குருபக்தியைச் செலுத்துவர். ஏனைய நண்பர்களைப்பற்றிப் பேசும்பொழுதும்,

(14) "பிறராற் பெருஞ்சுட்டு வேண்டுவான் யாண்டு
மறவாமே நோற்பதொன் றுண்டு—பிறர்பிறர்
சீரெல்லாந் தூற்றிச் சிறுமை புறங்காத்து
யார்யார்க்குந் தாழ்ச்சி சொலல்"

என்றபடி அவர்களின் குணங்களையே எடுத்து விதப்பர். எப்பொழுதுந் தமதுள்ளத்திற் பிறரது நலங்களையே குறிக்கொள்வர். இராய்பகுதூர் - கோபால்ராவ் அவர்களைத் தமது வாழ்நாண்முழுதும் புகழ்ந்து கொண்டிருந்தனர். மைசூர் திவானாக இருந்த அரங்காசார்லுவைப்பற்றி "அவருண்மையானமகான் மிக்கமேதாவி நவினகாரியங்களை யெடுத்து அவற்றை நிலைபெறச் செய்யும் விஷயத்தில் அவருக்குள்ளசக்தி யாவராலும் அதிசயிக்கத்தக்கது." எனப் பன்முறையு முரைப்பர். சகலகலாவல்லவரான பூண்டி அரங்கநாத முதலியாரவர்களைத் தமது சிரசிற்கொண்டு வந்திப்பர். ஆசாரசீர்திருத்த விஷத்தில் அதிக ஆவலுடையவர். பெண்கல்வியினும் மிக்கவிருப்புடையர்.

ஒருசமயங் கடல்கடந்து வேற்றுத்தேயஞ் செல்ல நேர்ந்தபோது அதைத் தவிர்த்திட்டனராயினும், அவ்விஷயத்தில் அவருக்கு மாறானவெண்ணங்கிடையாது.

பாலிகா விவாகத்தால் பலதுன்பங்கள் விளைவது உறுதி
யெனப் பன்முறையு முரைத்திருக்கின்றனர்.

தமதுமனதை, அனுதினமும் ஜகதீசன் பாதாரவி
ந்தத்திற் படியவைத்து ஜபதபவோமங்களைக் கிரமமாக
இயற்றிவந்தனர். ஷேக்ஸ்பியரியற்றிய இங்கிலீஷ்நாடகங்
களில் அவருக்கு அன்பதிகம். இங்கிலீஷ்பாவலராகிய
**கோல்ட்ஸ்மித்து** என்னுங்கவியெழுதிய **வைகார் ஆப்**
**வேக்பீல்ட்** என்னும் கிரந்தத்தைமட்டும் 50 முறைக்
குமேலாகந்தத்மீதாகி படித்தனராம். சங்கீதத்திலும்
விசுவாசமும் நல்ல ஞானமும் படைத்திருந்தார். இது
நாஷனல் இந்தியன் சங்கத்தார் பச்சையப்பன் கலாசா
லையிற் கூடிய கூட்டத்தில் அவரெழுதிப்படித்த வியா
சத்தாற் றெரியவந்தது. அப்பொழுது அச்சபையில்
சபாநாயகராக வீற்றிருந்த சென்னை கவர்னர் கிராண்
ட்பெருமான் அவ்வியாஸத்தைக் கேட்டுப் புளகாங்கி
தராகி ஐயரவர்களைப் பெரிதுங் கொண்டாடினர். முற்
குறித்த தாசில்தார் முத்துசாமி நாயகரவர்கள் நமதை
யரவர்களைக் கண்ணுற்ற நாண்முதற் சென்னை ஹைஸ்
கூலில் பெருத்த பரீக்ஷையிற் றேறும் வரையில் உண்
டி உடை பாடசாலைச் சம்பளம் முதலிய அனைத்தை
யுந் தந்துவந்ததேதவிரக் கடைசியாகப் பரீக்ஷையிற்றே
றிவந்தபோது அவரைக்கட்டியணைத்துக் கழிபேருவ
கையுடன் உருமாலையும் ஒரு பைநிறையப் பணத்தையுங்

கொடுத்துச் "சகலசம்பத்துடனும் நீ வாழ்வாயாக" என ஆசீர்வதித்தனர். ஐயரவர்களுந் தமது அபிமான பிதாவாகிய அந்நாயகரிடத்துத் தமது வாணாண்முழுதும் நீங்காத நன்றியுடையவரா யொழுகினர். அந்நாயகரிடத்தன்றி மற்றொருவரிடத்தும் நமதையரவர்கள் இரந்தறியார்.

இந்நற்குணங்களுடன் ஈகைக்குணமும் உடையராகவே இருந்தனர். அவர் தமக்குச் சஷ்டிபூர்த்தி சாந்தி நடந்த காலையில் மாயவரத்தில் ஒரு சமஸ்கிருத பாடசாலையை ஸ்தாபிப்பதன் பொருட்டு ரூபா. 25,000. தருமமாகக்கொடுத்ததுந் தவிர அப்பாடசாலைக்கு மற்றும் பலவிதவுதவிகளைச்செய்ததாகவுந் தெரிகிறது. அவர் சகலவிஷயத்திலும் புண்ணியபுருஷர். அவருக்குவாய்த்த மனைவியும் உறுப்போ டுணர்வுடையவள். கொண்டான் குறிப்பறிந் தொழுகுதீராள். நாணமடனச்சம் பயிர்ப்பென்னு நாற்குணமு நன்கமையப் பெற்றவள். வெறுப்பன செய்யாள். கணவன் விழைவனகண்டு செய்வள். விருந்தோம்பலின் விழைவுடையவள். கணவனையன்றி வேறோர்தெய்வத்தைக்கருதாள். இத்தகைய மனைவியுடனும் அறிவிற்சிறந்த பல மக்கட்பேற்றுடனும். தமது நட்பினராகிய நன்னுணர்வினருடனும் மற்றும் வாய்த்த கிளைஞர் பலருடனும் இம்மையில இன்புற்று இனிதுவாழ்ந்து 1895-ம் ௵ பரமன் திருவடியடைந்தனர்.

(15) "அரியதுகேட்கின் வரிவடிவேலோய்
அரிது அரிது மானுடராதலரிது,
மானுடராயினுங் கூன்குருடுசெவிடு
பேடுநீக்கிப் பிறத்தலரிது,
பேடுநீக்கிப் பிறந்தகாலையு
ஞானமுங்கல்வியு நயத்தலரிது,
ஞானமுங்கல்வியு நயந்தகாலையுந்
தானமுந்தவமுந் தாஞ்செயலரிது,
தானமுந்தவமுந் தாஞ்செய்வராயின்
வானர்நாடு வழிதிறந்திடுமே." சுபம்.

ஸ்ரீ

# திவான்—அரங்காசார்லு

## C. I. E.

பல்வளங்கெழுமியதென நல்லிசைப்புலவரான் மதித்துக் கூறப்பெற்ற இப்பரதகண்டத்துத் தெனுதுபக்கத்து விளங்கும் சென்னை இராஜதானியுட் சிறப்புற்ற சுதேசராஜ்ஜியங்களுக்குச் சென்னியதாய் மன்னியது மைசூரென்பதே. அது ஆங்கிலேய துரைத்தனத்தைப் போற் சட்டதிட்ட நிர்வாகங்களைப் பெற்றது. சந்தன வேரும் கரியவகிற்கட்டையும் தண்ணிய மயிற்பீலியும் எழுமதஞ்சொரியுங் கரிபெருமருப்பும் தரளக்குவையும் திரைக்கைகளாலெடுத்து இரப்போர்க்கு இரக்கத்தோடு வாரியெறியும் ஈகையர்போல இருமருங்கும் வீசிக்கொண்டு குணகட ஓடிச்செல்லும் பாலாற்றி னுற்பவத்திற்கு இடமான நந்திதுர்க்கத்தைத் தனதிடங்கொண்டது. வாழை பலா கமுகு மா முதலிய பலன்றரும் விருக்கங்க ணிறைந்த துருமகங்களைத் தனக்குக் காவல்போன்று நாற்புறமும் சூழப்பெற்றது. யானைக்கூட்டமுங் குதிரைப்பந்தியும் பல்பணியமைந்த இரதநிலைகளும் நிலவ அழகுபெற்று வதிவது. அந்தணர்முதலிய நாற்

பாற் குலத்தினரும் பந்திபந்தியாக அமர்ந்திருக்கும்
மாடங்களால் மன்னப்பெற்றது. இன்னிசைக்கருவி
யைக் கைக்கொண்டு பாடும் பாடகர்களின் மாளிகை
களின் பரப்பா லலங்காரமுடையது. மான்மதமுதலிய
நறுநாற்றப் பொருள்களின் வாசனையால் மணக்கப்பெ
ற்றது. மலைபடுதிரவியமும் காடுபடுபொருளும் நாடு
படுபண்டங்களும் எந்நாட்டுக்கு மிந்நாடே குறைவறவுழ
ங்கு மென்று மதிக்கும்படி குவாலிட்டு வைக்கப்பெறும்
அங்காடிகளா லலங்காரம் பெற்றுவிளங்குவது. தலை
நாவென்ன நடுநிலைமாறாது நீதிசெலுத்து மரசனைத்
தனக்கு முகமாகக்கொண்டு மிளிர்தலால் இந்நகருக்
கிணை சொன்னநகரத்து மில்லையென மதிக்கப்பெறுவ
தான இம்மைசூருக்கு இடைக்காலத்துநேர்ந்த இடுக்
கண்களைத் தொலைத்து நன்னிலையினிறுத்திய செந்
நெறிப்புலவ ரொருவருளர். அவரே திவான்-அரங்கா
சார்லு C. I. E. என்பவர்.

இவ்வுத்தமரின் சீரிய குணங்களை ஓர்ந்துணர்வது
நல்லோர் கடமையன்றோ? "நல்லோர் குணங்களுரைப்
பதுவு நன்றே." என்பது ஆப்தவாக்கியமல்லவா?
அவர் குணவிசேடங்களை யறிந்தார் பலராயினும், அவ
ற்றை யெடுத்துப் பேசுவதால் பிறரு மவர்கொண்ட
நன்னெறியைத் துணைப்பற்றக் கூடுமென்னு மெண்ணத்

தானும், இப்போழ்துள்ள இவானும் நமது தொழிலினை மாட்சிபெற அவர்போனடாத்திப் பெருமையுறக் கூடு மென்னு நோக்கத்தானுமே ஒருவாறுதொகுத்தும் விரித்துங் கூறத்தொடங்கினன்.

## பிறப்பும் படிப்பும்.

அரங்காசார்லு என்பவர் செங்கற்பட்டுக்கடுத்த ஒரு சிறுகிராமத்தில் நமது குலஞ்செய்த குறைவற்ற நோன்பினாற் கி. பி. 1831-ம் ஆண்டிற் சனித்தனர். அவரைப் பெற்றோரும் பன்னாட்பயின்ற புண்ணியத்தாற் பெரும் பொருள் பெற்றோரேயாவர்.

(1) "தம்பொரு ளென்ப தம்மக்க ளவர்பொரு
டந்தம் வினையான் வரும்.

என்பது சத்தியமன்றோ: அத்தகைய புத்திரப்பேறடைந்த பெற்றோர்கள் வறியன்கண்டமாநிதியென்ன அவரைப் போற்றிவளர்த்து வருங்கால், இருநான்குபருவத்திலேயே ஒருநான்கு மறையுணர்ந்தோர்க்குள்ள உணர்வுடைமையை யுணர்ந்து, தாம் பயிற்றிவரும் சுபாஷையோடு ஆங்கில பாஷையினும் விருத்தியடைவிக்க விரும்பி, அவரைச் சென்னைக்கு அனுப்பினர். "இளமையிற்கல்" என்னும் முதுமொழியைப் பொதுமொழியாக்காது தமக்கே ஔவையார் கூறினதாகக் கொண்டு உறுதியோடு ஊக்கத்தோடுங் கற்க ஒருப்பட்டுப் பெற்றோரைவிட்டுத் தமக்குற்றோரில்லத்திற்கு வந்தனர். அவ்வளவு சிறுவயதில் தந்தை தாயரைவிட்டுத் தனியிருக்க

விரும்புவது சாத்தியமன்று. "ஊழின்வழியுள்ளம்." ஆதலால், இது அவருக்கெளிதாயிருந்தது. அக்காலத்திற் சென்னையில் ஹைஸ்கூல் என்பதே பிரஸித்திபெற்ற கல்லூரி. அதுவே இப்போது பிரஸிடெஸ்ஸி காலேஜெனப் பிரஸித்திபெற்றிருக்கின்றது. வெளியூரிலிருந்துவந்து அப்பாடசாலையிற் படிப்பது அரிது; மிக்க அறிவுடைய மாணவரே அதிற்படிப்பவர். கல்விக்கடலென்று கற்றோரால் கணிக்கப்பெற்ற **மிஸ்டர் பவ்வல்** என்பவர் அப்பாடசாலையின் தலைமையுபாத்தியாயர். அவரது குணசீர்மையையும் கல்வியையும் ஞாபகங்கொண்டு களிகூரற்கன்றோ? அவரது உருவம் அப்பாடசாலையில் அமைக்கப்பெற்றிருக்கின்றது. அவரது புகழெனும் வெண்மையே அவருடன் முற்றும் வியாபித்ததெனக் கருதும்படி அப்பிரதிமையும் பளிங்கு கல்லாலேயே ஆக்கப்பட்டிருக்கின்றது. அவரிடம் முதன்முதல் கற்றுணர்ந்து தேறிப் பட்டம்பெற்ற பிரபல மாணவர்களில் அவ்வரங்காசார்லுவே முக்கியமானவர். அவர்கற்குங்காலத்திற் பசியுடையவன் பதமுண்பதுபோல ஆர்வத்தோடு ஆசிரியர் கூறுவனவற்றை விடாது அகக்களத்தின் மன்னவைப்பர். அவர்படித்த வாண்டு பத்தே, எடுத்த பரிசு நூறே, அடுத்த கீர்த்தி கோடியே. இதுவன்றோ? பாக்கியம். அவர் பெரிய பட்டப்பரீக்ஷையிற்றேறிப் பாடசாலையை விட்டகன்றது

1849-ம் வருடம். அவருடன் வகுப்பிற் படித்த மாணவர்களுள் அவரது மதிநுட்பத்திற்கு மகிழாதாரிலர். அவரிடம் படிப்பிற் போரிட்டுப் பிந்தினோர்பலர். அவர் குழந்தையைப் போலக் கபடற்று எல்லோரிடத்தும் அன்புபாராட்டும் அரிய குணத்தராக விருந்தமையால் அவரை யாரும் விரும்புவர். சிற்சில சமயங்களில் அவர் செய்கை விபரீதமாகத் தோன்றினும் தோன்றும். அதனை யெவரும் பொருட்படுத்துவதில்லை. "கீழ்கொண்டு புகல்வது கீழோர்குற்றம்" ஆதலால் உள்ள குணத்தையே உகந்து கொள்ளுவர்.

## உத்தியோகம்.

அரங்காசார்லு முதன்முதல் செங்கற்பட்டுக் கலெக்டர் ஆபிசில் டிரான்ஸ்லேடர் (மொழிபெயர்ப்பவர்) என்னும் உத்தியோகத்திலமர்ந்தனர். அவர் அவ்வுத்தியோகத்திலமர்ந்தது பெற்றோருக்கேயன்றித் தமது ஊராருக்கும் உள்ளக்களிப்பை ஊற்றுச்சுரப்புப்போலுண்டாக்கிற்று.

(2) "யானை மருப்பு மருங்கவரி மான்மயிருங்
கான வரியுகிருங் கற்றோரும்—மானே
பிறந்தவிடத் தன்றிப் பிறிதொருதே சத்தே
சிறந்தவிடத் தன்றோ சிறப்பு."

என்றபடி கற்றோர் மற்றோர் தேசத்திற் சிறப்புறுத லியல்பாயிருக்க; அவர் தமது ஊரிலேயே சிறப்புற்று

விளங்கப்பெற்றது மிக்க வியப்பினும் வியப்பே. சின்னா ளுக்குள்ளாகவே அவர் படிப்படியாக வுத்தியோகத்தி லுயர்வடைந்து நெல்லூர் ஜில்லாவிற் பிரதான சிரஸ்தா தாராயினார். அவர் துரைத்தன உத்தியோகத்தி லமர்ந்தகாலத்திற் கைக்கூலி விஷயமாயும் மிராஸ் உரிமை கள் விஷயமாகவும் ஆங்கிலபாஷையிற் சிறுபுத்தகங்க ளெழுதி வெளியிட்டனர். அப்புத்தகங்கள் படிப்போ ரகத்தைக் கவரக் கூடியனவாயும், மனோபாவக வுணர் வினை எழுவித்து இன்பம் பயப்பிக்கக்கூடியவாயும், இங் கிலீஷ்பாஷாஞானத்தை யெளிதி லூட்டுவிக்கத் தக்கன வாயு மிருந்தன. அப்புத்தகங்களைப் படித்த ஒரு ஆங் கில பத்திராதிபர் அமிதசந்தோஷத்தோடு "தேர்ந்த ஆங்கில பண்டிதனாயினும் அப்புத்தகங்களை வாசித்தவி னாலேயே பெரும்புகழடையக்கூடிய பெரும்பாண்டியத் திய மடைவன்" என்று வாயார வாழ்த்தினரெனில், அவற்றின் விசேடத்தைப்பற்றி யாது கூறுவது. ஆங்கி லபாஷையி லவருக்கிருந்த வன்மைகளைக் கண்கூடா கக் காட்டற்கு அவையொரு காட்டாகும். சிறிய தீபத் தொளியைக் கொண்டு பெரிய பொருளைக் காணுதலைக் கண்டாமன்றோ?

1859-ம் வருடம் இனாம்கமிஷன் ஏற்பட்டது. அத ற்கு மிஸ்டர் ஜி-என்-டேய்லர் என்பவர் அத்யக்ஷராக விருந்தனர். அவ்வரங்காசார்லு அவருக்கு உதவி உத்

கியோகஸ்தராக அமர்ந்தப்பெற்றார். அக்கமிஷனைத் தக்கவாறு அமைந்துச் சரிவர நடத்துங்கடமை நமது ஆசார்லுவினதாகவே யிருந்தது. அவ்வுதவியாளரது சாமர்த்தியத்தையுஞ் சதுரப்பாட்டையும் வாய்மையையுங் கண்டு கமிஷனர் அவரிடங்கொண்டிருந்த நம்பிக்கைக்கு அளவில்லை. மிஸ்டர் டெய்லர்துரையின் உதவியரெனப் பெயர்பெறினும், அக்கமிஷனா லுண்டான புகழ்முற்றும் அரங்காசார்லுவுக்கே உரியதாயிற்று. அதைக் கண்டு ஐகோர்ட்டு ஜட்ஜியா ரொருவர் "கமிஷனர் டெய்லருக்கு அரங்காசார்லு விளக்கொளியாயொளிர்ந்தாரன்றி அவர் நிழல்போல அவர் சென்ற வழி இவர் சென்றிலர்" என்று வியந்து கூறிப்புகழ்ந்தனர். ஜட்ஜியவர்கள் கூறியது உண்மையே யென்று மதித்திருந்த டெய்லர் தமக்கு இந்தியாவிலுள்ள இருப்புப்பாதைகளின் வரவு போக்குகளைப்பற்றி விசாரிக்கும் அதிகார உத்தியோகங் கிடைத்தபொழுது, அதன் கணக்கு விஷயங்களைச் செவ்விதி னாராய்ந்து குணகுணங்களை யுண்மையி லுணரத்தக்கவரும் அகுணங் கண்டுழி அதனைவிலக்க உபாயமுரைப்பவரும் குசைநுனிபோன்ற கூரிய புத்தியாளரும் அரங்காசார்லு எனவே மதித்து அவரைத் தம்மிட மிருக்குமாறு அழைத்துக் கொண்டனர்.

"கற்றோர்க்குச் சென்றவிடமெல்லாஞ் சிறப்பு" என்

றபடி அவ்வுத்தியோகத்திலும் அவர் பெற்றது பெரும் பேறே. அவர் புத்தி எத்தொழிலினும் பின்னிடையாது வெகுநாட் பழகிவந்ததுபோல முன்னோடிப் பயிலுந் திறத்தது. வைரவூசியாயின் அது எல்லாமணிகளையுந் தொளைத்து ஊடுருவுமன்றோ? "ஊக்கமுடைமை யாக்கத்திற்கழகு" என்பதை இவர் மாட்டு எவருமறியலாகும்.

இங்ஙனமிருக்க ; 1864-ம் ஆண்டில் கரன்ஸிநோட்டு வழங்க ஏற்பட்டது. அக்காலத்திற் கள்ளிக்கோட்டையில் ஒரு கரன்ஸி ஆபீசு ஸ்தாபிக்கப்படவே அதற்குத் தலைவராக டிப்டி கலெக்டர் வேலைக்குரியார் யாரென அவ்வாபீசின் அதிகாரிகள் யூகித்து நமது அரங்காசார்லுவே அவ்வுத்தியோகத்தைச் செம்மையிற் பரிபாலிக்கத் தக்கவரெனத் தேர்ந்தெடுக்கப்பெற்றார்.

(3) "வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனைய துயர்வு"

என்ற பெருநாவலரின் வாக்கியத்திற்கு அவரே ஒரு நல்லிலக்கியமாயினர். மீன்குத்த முயலுஞ் சிரலினைப் போல மிகக் கண்ணோட்டமாகக் கவனிக்கத்தக்க இவ்வரிய வுத்தியோகத்தை அவர் நடத்திய மேன்மை எடுத்துக் கொண்டாடத்தக்க பான்மையதாகவே யிருந்தது.

## மைசூர் சம்பந்தம்.

மைசூரில் மகாராஜா கிருஷ்ணராஜவுடையாரின் ஸ்வீகார புத்திரரான ஸ்ரீ-சாமராஜேந்திர உடையார் இளைஞராக விருந்தமையின், அவருக்கு உரியபருவத்தில் அவ்வரசை அவரிடம் ஒப்புக்கொடுக்கிறதாகக் கூறி ஆங்கிலேய துரைத்தனத்தார் அவ்விராஜாங்கத்தை 1868-ம் வருடம் தாமேற்றுக்கொண்டு நடத்தத் தலைப்பட்டனர். அந்நாளில் அரண்மனை காரியங்கள் முற்றும் தமதிட்டப்படியுஞ் சட்டப்படியும் நடத்துதற்குச் சர்வாதிகாரம் நமது அரங்காசார்லுவுக்குக் கொடுக்கப்பட்டது. அதனைத் திறமையோடு நடத்துதல் மிக்க கஷ்டமேயாயினும், அவருக்கு அஃதோர் கஷ்டமாகத் தோன்றவில்லை. முடிப்ப முடித்துப் பூசுவபூசி யுடுப்ப வுடுத்துங் குடிகள் கூறும் முறைப்பாட்டிற்குச் செவி கொடாத கொடுங்கோலரைப்போலாகமல், நமது இராஜா-சாமராஜேந்திரவுடையார் ஒற்றினு லுணரப்படாதனவும் தமது பொற்றோளே துணையாகக்கொண்டு ஒற்றியுணர்ந்து நீதிக்கஞ்சிநடக்கும் செந்நெறியராகவேண்டுமேயென்னு மெண்ணத்தால், அவரை நால்வகை வருணத்தார்க்கு வேண்டிய குடிமையினும், தந்நிலையிற் றிழாமையும் ஊழாற் றாழ்வுவந்துழியு முயிர்வாழாமையுமான மானத்தினும், செயற்கரிய செய்தல் செருக்கில்லாமை பிறர்குற்றஞ்சொல்லாமை ஆகிய நற்குணப்பெ

ருமையினும், பல்குணங்களானு நிறைந்து அவைகளை ஆளுந்தற்றன்மையதான சான்றாண்மையினும், பெருமை சான்றாண்மைகளிற் றாம் வழுவாதுநின்றே எல்லாரியல்புகளையு மறிந்து அவற்றிற்கொத்து நடத்தலென்னும் பண்புடைமையினும், உலகபாலர் வடிவாய்நின்று உலகத்தைக் காத்தலென்னும் இறைமாட்சியினும், அரசன் அறிவுடையனா யிருந்தால் தன்னுயிர்க்கேயன்றி மன்னுயிருக்கும் பயன்படுதல் குறித்து அறநூல் நீதிநூல் யானை குதிரை படைக்கலம் முதலிய நூல்களவசியம் பயிலவேண்டு மாகையால் அக்கல்வியினும் பழக்குவித்தலிலேயே அரங்காசார்லுவுக்குக் கஷ்டமும் பொறுப்பும் ஏற்பட்டது. இதுவே அவரது பரிபூர்ண இஷ்டம். அவர் தங்கடமைகளை நன்குசெய்து முடித்தவரென்பதற்கு இப்பொழுதும் அவரைப் பலரும் புகழ்தலே போதிய சான்றாகும். வெகுகாலமாய் அந்த சமஸ்தான அரண்மனையை வெளியுமிழாதபடி கவர்ந்து மறைத்திருந்த அழுக்காற்றினையும் துர்நடவடிக்கை பக்ஷபாதம் மோசம் கிருத்திமம் சூதுவாது வஞ்சனை முதலிய கூடாவொழுக்கங்களையும் தலைகாண்ப தரிதாம்படி களைந்தெடுத்த தீரர் அவரே. அவ்வரண்மனையென்னும் பண்ணையில் நல்லியற்கை நற்குணம் என்னும்விதையை விதைத்துப் பயிராக்கிப் பலந்தருவித்த பார்ப்பன உழவரும் அவரே:

இளைய வரசு நாளுளும் தலையெடுத்துத் தளிர்த்து வளரப் போற்றிவருந் தொழிலில் அவருடன் றுணை கொண்டவர் கர்னல் மாலிஸன் என்பவர். அவ்விருவரும் பலராலும் பாராட்டத்தக்க நன்முயற்சியில் முயன்றிருந்தவர். இவ்வாறு நம தாசார்லு பதின்மூன்றாண்டுக்குள் தமது விடாமுயற்சியால் சிற்றரசை நன்னெறியிற் பழகுவித்து வந்ததன்றி, அச்சமஸ்தானத்திலிருந்த கக்ஷி பிரதிகக்ஷிகளும் கனவான்களுக்கிருந்த கலகங்களும் மனஸ்தாபங்களும் ஒழியும்படி முயற்சித்ததேயன்றி யவரனைவருக்கு மனக்கஷ்டநேராதபடி திருப்தியாக நடந்து கொண்டது அதிக துர்லபம். பாம்போடு ஒருகூரையில்பயில்வது போன்றதல்லவா? பகைகொண்டாரிடம் பயில்வது. ஆங்கிலேய கமிஷனர் மிஸ்டர் கார்டன் என்பவருக்கு அவர் பரம சகாயராகவிருந்தமையால், அவரிடம் மிக்கவன்பு பாராட்டற்கிடமாயிற்று. இத்தகைய சீர்திருத்தங்கள் முடிந்துவருங் காலமே அப்பேரரசினை இளையவரசராகிய ஸ்ரீ சாமராஜேந்திர உடையாருக்கு ஒப்புவிக்குங்காலமாக ஆங்கிலேயருக்கு ஏற்பட 1881-௵ மார்ச்சுமாதம் அவ்வரசினை ஒப்புவித்துப் பட்டாபிஷேகமு நடத்துவித்தனர்.

### திவான்.

இங்ஙனம் மைசூர் இராஜ்ஜியத்தின் சிறப்பினுக்கு உழைத்துவந்த நமது அரங்காசார்லுவின் கஷ்டத்திற்

வுக்கு இயன்ற சகாயத்தைச் செய்துவருதலிற் பின்னிடையாதவர். இவ்விராஜாங்க அரண்மனையில் வெகுகாலம் குடித்தன நிர்வாகத் தலைவராக விருந்து நடத்திய சீர்திருத்தங்கள் மனத்திருப்தியை விளைப்பனவாயிருந்தமையின், அவர்விஷயத்தில் இராஜாவுக்கிருந்த நம்பிக்கையுங்கொடுத்திருந்த சர்வசுதந்தரமும் தமக்குத் தமதிஷ்டப்படி எக்காரியங்களு நடத்தக் கூடுமானதாயிருந்தமையுமே இரண்டா மனுகூலம். தேயத்திற்குங் காலத்திற்குந் தக்கவாறு உபயோகிக்கக்கூடிய சமயோசித யுக்தியை அப்போதைக்கப்போது தமக்குக் கூறத்தக்க மிஸ்டர் போர்டர் துரையவர்கள் தம்மிடம் விடாநண்பும் அன்புமுடையரா யிருந்ததே மூன்றுமநுகூலம். மேற்படி துரையவர்கள் மகாராஜாவுக்கு உபாத்தியரா யிருந்ததன்றி மந்திரியும் போல்வர்; பெருநோக்கமுடைய பரந்தாழ்ந்த சித்தத்தினர். அத்தேசத்தவர் தமக்கோருடலுமாகத் தாமவராவியுமா யிருப்பர். ஆகவே, அவருக்கு அத்தேசத்திலிருந்தசெல்வாக்கும்பெருமையும் வேறெந்த ஆங்கிலேயரும் பெற்றிரார். சத்தியத்திற் கட்டுப்படுபவரும் சுயேச்சையாகவே நன்னெறியைநாடி நடப்பவரும் ஆங்கிலேய அரசாக்ஷியிற் காணப்படுந் தீரர்களுக்குப் பின்வாங்கா மனத்தீரரும் கல்வி கேள்விகளிற் றேர்ச்சியுடையருமான சுதேசிகளின் சகாயங் கிடைசியாக அவருக்கிருந்த அநுகூலம். இவ்வநு

கூலங்க ளிருந்தலையானன்றோ மேற்குறித்த இன்னுவென்பன அந்நாட்டின் மன்னுவாயின. தமது பராமரிக்கையானோர்ந்த இன்னல்களை விலக்குவார் தேயவியலை ஆராய்ந்தே ஒழிக்கவேண்டுமாதலானும், அதனை யோர்ந்துணர்ந்து ஒழிக்கும்வகையை யோதுவிப்பவர் பெரியோரேயாதலானும் பெரியோரைத் துணைக்கொண்டார் பெறுப்பேரியாதுளது.

(5) "அறனறிந்து மூத்தவறிவுடையார் கேண்மை
திறனறிந்து தேர்ந்து கொளல்"

என்பது அவர் நடவடிக்கையை வற்புறுத்துகின்றது.

## துரைத்தன நிர்வாகம்.

அரங்காசார்லு துரைத்தன நிர்வாகத்தை மேற்கொண்ட திறம் யார்க்குண்டெனப் பிறர் மதிக்கத்தக்கதாகவே யிருக்கும். முன்னர்த் தமது உணர்வினை ஒருப்படுத்தி அரசனுக்குப் பிறரால் பின்னர்நேரும் இனிமையையும் இன்னாமையையுமுணர்ந்து அதற்கு முன்னரே அவை அவ்வரசனை அணுகுதற்கும் அகலுதற்கும் ஆவனவற்றை யாராய்ந்து வருமுன்முயலுதலும் வருமுன் காத்தலும்,

(6) "ஐயறிவுந் தம்மை யுடைய வொழுகுதல்
எய்துவ தெய்தாமை முற்காத்தல்—வைகலும்
மாறேற்ற மன்னர் முறையறித லிம்மூன்றும்
சீரேற்ற பேரமைச்சர் கோள்."

என்னு நீதிநூலை யனுசரித்து நடத்துவர். இவை அமைச்சருக்கு வேண்டற்பாலனவான முக்கியகுணங்களன்றோ? இவை இராஜதந்திரங்களின் அங்கங்களாம். வணங்கலும் புகழ்தலும் எதிர்கொள்ளலும் நட்புக்கூறலும் உறவுகூறலும் எனக்கூறும் சாமதந்திரம் ஐவகையும், கிடைத்ததற்கரிய பொருளைக்கொடுத்தல் தனக்குத் தரும்பொருளை வாங்காதுவிடுத்தல் கொடுக்கவேண்டிய பொருளைக்கொடுத்தல் பிறர்பொருள்கொண்டு கொடுத்தல் கப்பம்வாங்காதொழிதலெனக் கூறும் தானதந்திரம் ஐவகையும், நட்பொழிதல் கூடினரைப்பிரித்தல் வேறுவகைவிளைத்தல் என்னும் பேததந்திரம் மூவகையும், துன்பஞ்செய்தல் பொருளைக்கொள்ளல் கொல்லுதல் எனக்கூறும் தண்டதந்திரம் ஐவகையும் இவர்பாணிலவும். அரைய னுள்ளக்குறிப்பை ஆடியிற்காணு நிழல்போலுணர்ந்து அவனுக்கு அறத்தின்வழி யூதியம்வருங் காரியத்தின் முயலலன்றி அலாபகாரியத்தில் அடியிடுதலை ஒருபோதுஞ் செய்யார். அமைச்சராவார் தொழி லீதெனவே, [சுள்வான

(7) "மறத்தான வேலான் மனக்கொள்கை தந்நெஞ்
சிறத்தாடி நீழலெனத் தோற்ற நிறுத்துமற்ற
துறத்தாரெனி லாற்றுவ ரன்றெனிலக்கமாவி
யிறத்தான் வரினு மனத்தானு மிலைழக்கவொண்
[ணார்."

என நூலு நுவலுகின்ற தல்லவா? அவர் நடாத்து மமைச்சின்றிறம் விரோதிகளாலும் வெறுக்கத்தக்கதா காது. சுருங்குஞ் சொற்களால் வாய்மை மொழிவர். செட்டாய்ச் செலவிட்டு வருவாயைப் பெருக்குவர். குடிகளுக்கும் இராஜாங்கத்திற்குமுள்ள பரஸ்பர சம்பந்த மித்தகையதென நன்குவிளக்கி ஒவ்வொருவர் மனத்திலும் பசுமரத்தாணியெனப் பதிவிப்பர். சொல்லுவ தெளிமை சொல்லியவண்ணஞ் செய்தலேயருமை என்பதைவிலக்கி, அவர் சொல்லுவதே அருமை, சொல்லில் குடிகள் செய்வதெளிமையெனப் பிறர் கூறும்படி தாமிட்ட சட்டங்களைக் குடிகள் தலையிற்றாங்கி நடத்துமாறு அவரைத் தமது இருகண்மணிகளைப்போற் கருதிப் பாதுகாப்பர். அதனானே அவரிடு மாக்கினைகள் எழுத்துவடிவாகவே யிராமல், அநுஷ்டானத்திற்கும் அப்போதைக்கப்போதே வந்து பலித்துப்பட்டுவந்தன. அவர் அரண்மனை சர்வாதிகாரத்தை மேற்கொண்டிருந்தகாலத்தில் இராஜாங்க வரவு செலவு விஷயமாக அவருக்குள்ள அபிப்பிராயத்தைப் பொதுவாய்க் குறித்தெழுதி ஒரு சிறுபுத்தகத்தை வெளியிட்டிருந்தனர். அதில் ஆங்கிலேயரது ஆட்சியில் மைசூருக்குண்டான குறைகளைத் தெளிவாக விளக்கியிருந்தார். வடிவிற் சிறிய அப்புத்தகம் அவர்காலத்துக்கு ஒரு பெருநீதிப் புத்தகமாய் உபயோகத்திற்கு வந்தது.

அவர் இராஜாங்க நிர்வாக விஷயத்தில் நடத்துமுறைகளை மிஸ்டர் போர்டர் துரையவர்கள் கண்கூடாகக் கண்டு மிக்க சிலாகனீயமாய்ப் புகழ்ந்து புகழ்ந்து அகமகிழ்வர். அரங்காசார்லு திவானானகாலத்திற் செய்த சீர்திருத்தங்களையும், செய்ய மனவேட்டிற் பொறித்து வைத்திருந்த விஷயங்களையும், நினைத்தபடி நிறைவேற்றுந் தருவாயிலிருந்த விஷயங்களையுஞ் சுருங்கக்கூறத் தொடங்கினும் விரிந்த பெருநூலாகவே முடியும்.

## பொருளீட்டம்.

(8) "பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்ல இல்லைப் பொருள்."

ஆகலின், அரசனுக்கிருக்கும் படைமுதலிய துணைகளோடு பொருளே பெருந்துணையாதலால், அதனை அறத்தாற்றினாற்சேர்த்துவைப்பது அமைச்சரியல்பென நமது அரங்காசார்லும் பொருளீட்டுந்திறத்தில் மிகமுயலுபவராயினர். பயன்றருங்காரியத்திற் பணத்தைவிதைத்துப் பலனையறுக்கப் பலகாலுஞ் சிந்திப்பர். அவர் செலவு வெற்றெனப்போனதில்லை. அழித்தது ஒன்று அடைந்தது நூறாக விருக்குமேயன்றி, மலையைக்கெல்லி எலியைப்பிடிப்பார்போற் பலபொருளைச் செலவிட்டுச் சிறுபலனை யடையார். அப்படிச்செய்வது கைத்தலத்தனவான பொருளைக் கடற்கரையிலிறைத்துப் பின்னருப் பரித்துத் தேட வாட்களை வைப்பதுபோ லல்லவா?

இராஜ்ஜியத்திற்குப் பண்டாரமிக்கிருப்பதே அண்டார்க்கு அச்சந்தருமென்று கருதி, வருவாயைத் தேடும் வகையராய் இருப்புப்பாதை முதலிய வருவாய்க்குரிய காரியத்தையே செய்துவந்தனர். இவ்விஷயத்தில் ஆங்கிலேயரு மறியாத சூக்ஷ்ம புத்தியுடையார். குடிகளுக்கு அநுகூலத்தைச்செய்வது தமக்கு அநுகூலஞ்செய்து கொண்டதெனக் கருதுவர்.

(9) "உறுபொருளு முல்கு பொருளுந்தன்னொன்னார்
தெறுபொருளும் வேந்தன் பொருள்." [ர்த்

ஆதலால், வைத்தாரிறந்தொழிய வெகுகால நிலத்தின் கட்கிடந்து பின்கண்டெடுத்ததும், தாயத்தார் பெறுத [illegible] சுங்கத்தினும் காலினும் வருவதும், அரசனுக்கு அறத்தா லீட்டும் பொருளாதலால் அவற்றை அறவழியிற் சேகரிப்பர். அவர் பொருளீட்டிச் சேகரித்த திறம் மிக மதிக்கப்படுவதாதலால் அவர்விஷயத்தில் அவ்விராஜாங்கம் இன்னும் நன்றி பாராட்டத்தக்கதே. மிகவுஞ் சொற்பகாலமான இரண்டாண்டுக்குள் இராஜாங்கச்செலவை இராஜாங்க வரும்படியிலேயே அடக்கியதன்றி கைப்பினையுஞ் சேர்த்துவைத்தனர்.

## நியாயவர்த்தனம்.

(10) "தூங்குக தூங்கிச் செயற்பால தூங்கற்க
தூங்காது செய்யும் வினை."

என்று பொய்யா மொழியாரின் மெய்யாமொழியை அநுட்டித்து அவ்விராஜாங்கத்துக்குத்தக்க நியாய உத்

தியோகத்தரை நியமிக்க வேண்டு மென்னுங்கருத்துவிலையத் தாண்டிக்கொண் டிருந்தமையால் வாய்மையும் மனத் தூய்மையுமுடைய தக்கோரை அம்மைசூருக்குப் புறம்பாயுள்ள ஊர்களினின்றே தேடித்தருவித்துத் தக்க உத்தியோகங்களி லமர்த்தினார். அவ்விராஜ்ஜயத்துக் குடிகளுக்கே பெரிய உத்தியோகத்தைக் கொடுத்தால் இராஜாங்க விருத்திக்குத் தக்கவாறுழைப்பார்க ளென்பதும், விவகாரத்தைப் பக்ஷபாதமின்றிப் பகுத்துரைப்பாரென்பது மவர்கருத்து. இவ்வாறு புறவூர்களினின்று கொணர்ந்து சிவில் செர்விஸில் அமர்த்தித் தேசத்துக்குப் பெருமையும் குடிகளுக்கு க்ஷேமமு முண்டாக்கினார். பின்னர் திவான சேஷாத்திரிஐயர் ஜட்ஜி இராமசந்திரஐயர் முதலியோரும் நமது அரங்காசார்லுவிடத்தில் வேலையிற்பயின்று தேர்ந்தவர்களே. மைசூர்நாட்டு உத்தியோகஸ்தர்கள் ஆங்கிலேய மாகாணங்களில் உத்தமமான இடங்களிலுள்ள சிறந்த உத்தியோகஸ்தர்களுக்குச் சிறிதுங்குறைந்தவரல்லர். பெரிய உத்தியோகஸ்தர்கள் அச்சமஸ்தானத்தின் கைக்கூலிவாங்குந் தோஷத்திற் குள்ளானவர்களல்லர். அத்தகைய தவறு விவகாரமாவது அதனேரும் அநீதமாவது அங்கு நடந்தால் எப்படியும் திவானவர்கள் செவிக்கேறுமென்றும், ஏறில் அங்ஙனஞ்செய்தாரைக் கண்ணோட்டமின்றிக் கடிந்தொறுப்பரென்றும், ஒறுக்கிற் றமது கவுரவத்

திற்குப் பின்னும் வருமென்றும் அவர்கள் நன்குணர்ந் தவர்கள். ஆதலின் அவர்கள் உண்மையினின்று நெறி முறவுள்ளத்தராய்த் தமது உத்தியோகத்தைச் சீர்பெற நடத்துவர். 'உடையவன் கண்ணோடாப் பயிரழியும்' ஆதலால் நமது திவானவர்கள் இடைக்கிடை அவ்வுத்தி யோகத்தரின் உத்தியோகத்தினும் தமது கண்களையும் மனத்தையுஞ் செலுத்திவருவர். அவர் செய்துவந்த நியாயவர்த்தனம் மிக மகிழற்பாலது.

## சுலபராக விருத்தல்.

முற்காலத்தில் அரசராவது அமைச்சராவது தமது நாட்டுக் குடிகட்கு நேரும் துன்பத்தைத் தம்மிடமே அ வர் நேரிற்றெரிவித்துக்கொள்ளும்படி சுலபசேவைதரு வாராயிருப்பர். அன்றியும் அகாலத்தினேரு மாபத் தைத் தெரிவித்துக்கொள்ளத் தமதரண்மனை முன்றிலில் ஆராய்ச்சிமணியை அமைத்து வைத்திருந்தனர். அது போல நமது அரங்காசார்லுவும் காலநியதியேற்படுத்தி அக்காலத்திற் குறைகளைக் கூறிக்கொள்ளுங் குடிகளுக் குத் தமதுபேட்டியை எளிதிற்றந்து அவர்குறைகளைச் செவ்விதிற்கேட்டு ஒவ்விய உத்தரவை யளிப்பர். எச் சாதியராயினும் எந்நிலையராயினும் அவரை எளிதி னணுகித் தங்குறைகளைக் குறையின்றி யுரைக்க லாம். இங்ஙனம் அவரிடந்தந்தது அவர் வலம்பெறு தற்கேயன்றித் தமது பெருமை சுலபத்திற் பாந்து

வியாபித்தற்குமேயாம். இதனாற் சில்லரை உத்தியோகத்தினரது அதிகாரங்கள் ஒட்டந்தவிர்ந்தன. குடிகள் ஒவ்வொரு அதிகாரிக்கும் முறையே தெரிவித்துக் கொண்டு பின்னர் மேலதிகாரிகளாற் றமது குறைகளைக் குறைத்துக்கொள்ள எத்தனை நாட்செல்லும். இது விவேகப்பெற்றவன் அதனையனைக்கக் கிணறு வெட்டியபடியாகுமெனவே மதித்து, இவ்வளவு சுலபராக இருந்தனர்போலும். இதனால் ஏனைய உத்தியோகத்தினரது கொட்டம் அடங்கிற்று. குடிகளை அவர் எவ்வாற்றானும் தண்டிக்கற் கியலாதாயிற்று.

## பிரதிநிதிசபை.

இதுநிற்க; நமது அரங்காசார்லு முக்கியமாய்க் கொண்டிருந்த கருத்தாவது மைசூர்க் குடிகளை இராஜகீய விஷயங்களில் நன்கு பயிற்றுவிக்க வேண்டு மென்பதே. 1880-ம் வருடத்திலும் 1881-ம் வருடத்திலும் அவர்கூட்டிய பிரதிநிதிசபைகளே பின்னர் எதிர்காலத்தி லேற்படத்தக்க மைசூர் பார்லிமெண்டுக்கு அஸ்திபாரமாயிற்று. பொதுஜன சம்பந்தம் பெற்றுத் துரைத்தன நடத்துமுறையை முதன்முதல் இந்தியாவில் பரீக்ஷித்துப் பார்க்கத் துணிந்தவர் அவரே: ஆங்கிலேயரினும் சுதேசிகளினும் வேறெவரும் அங்ஙனஞ் செய்தாரிலர். அவர் இன்னுஞ் சிலகால முயிர்த்திருப்பாராயின் மைசூருக்கு இணையான இராஜ்ஜியம் என்று

மில்லை எங்குமில்லை யென்னும்படி நடத்திக்காண்பிப்பர். அரசனும் அவன் கீழ்ப்பட்டகுடிகளும் சேர்ந்து இராஜ்யபாரநடத்துவதும் குடிகளுக்கு எல்லாவிஷயத்திலும்க்ஷேமமும் ஆதரவும் உத்தமவரசாட்சியினலாய பெரும்பயனும் அரங்காசார்லுவினலேயே அமைந்தன.

## குணப்பெருமை.

அரங்காசார்லு மிகுந்த நற்குண சீலர்; அதனலவர் யாவர்க்கும் பிரியமானவராயிருந்தார். அவருடன் பழகுவோர்க்கு அவரிடத்து அன்புமிகாமற் போகாது. அவர் ஜயசீலராய் ஜனங்களின் நன்குமதிப்புக் குரியவராய் ராஜ்யபாரம்நடத்திக் கீர்த்தி படைத்தது இந்நற்குண விசேஷத்தினலேயேயாம். அவரதுமனம் மிக்க சக்தி வாய்ந்தது. நூதன கற்பனைகள் செய்யுந் திறமையுடையது. வியவகாரத்திற்கேற்றவாறு அமைக்கும் இயல்புடையது. அவர் படாடோப மற்றவர். கர்வமொழிந்தவர். பரோபகார சித்தந்தை யுடைய வாய்மையாளர். இக்குணங்கள் பெரிய வதிகாரம் வகிக்கும் உத்தியோகஸ்தர்களிடத்துக் காண்பது அரிதாகும்.

(11) "முந்திரைமேற் காணி மிகுவதேற் கீழ்தன்னை யிந்திரனு வெண்ணி விடும்"

இது கீழோரியற்கை இவ்வுத்தமரிடம் அதுவேன் றலைகாட்டும். அவர் தமக்கென்று திரவியந் தேடி வைக்கப் பிரியப்பட்டிருந்தால், எவ்வளவோ பணம்

சேர்த்து வைத்திருக்கலாம்; மைசூர் அரண்மனை யவ ரது கையிலிருந்தது; கஜானு அவரது ஸ்வாதீனம; ராஜ்யமே அவருடைய தாயிருந்தது. இருந்தும் தம க்கென்று ஒரு காசுஞ் சேர்த்துவையாது ராஜ பக்தியை மேற்கொண்டு பொது நன்மைக்கு உழைத்து ஏழையா யிறந்தவர் நமது ரங்காசார்லுவேயாவர். இவையல்லா து, அவர் ஸ்வதேசாபிமானப் பெருக்கமுடைய யாவ ரும் தம்மிடத்து ஸரஸமாய்ப்பேசி வியவகரிக்க இடங் கொடுத்து நன்மைமிகுந் தொழுகிய புண்ணியவான். உயர்ந்தவரிடத்துந் தாழ்ந்தவரிடத்தும் ஒரேவிதமான அபிமானம் வைத்திருந்தவர். ஜீவகாருண்ய மிகுந்தவ ரானமையின், எவர்களையும் பிரியமாய் நடத்துவார்; எவர்களிடத்தும் அன்புபாராட்டுவார். ஐகமத்தியத்தை (ஒற்றுமையை) நாடினவர். ஆசாரச் சீர்திருத்தஞ் செய்வதில் ஆர்வங்கொண்டவர். வைணவர்கள் தனித் தனியே யுண்பது வழக்கமாயிருக்க, பிராமணர்களனைவ ரும் ஒன்றுகூடித் திருஷ்டிதோஷமேனும் ஸ்பர்ச தோஷமேனும் பாராட்டாது உண்ணவேண்டுமென்று ஏற்பாடு செய்து மைசூரில் அவ்வாறே செய்வித்துப் பழைய வழக்கத்தை யொழித்தவர். ஸ்ரீ வைஷ்ணவர்க ளுள் மைசூரார் மாத்திரம் இன்றைக்கும் பிராமணர்க ளனைவருடனும் கலந்து புசித்து உறவாடி வருகின்ற னர் போலும்.